★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 15 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வருட. 91 இல. 140 | Thursday 15, June, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## பாரிஸ் உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி உரை

### பிரான்ஸ் ஜனாதிபதி அழைப்பு விடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**





புதிய பூகோள நிதி உடன்படிக்கைக்கான உலகத் தலைவர்களின் மாநாட்டின் உயர்மட்ட பேச்சுவார்த்தை அமர்வில், விஷேட உரையாற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரான்ஸ்

06

## சிறுவர் மத்தியில் டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு

### 35 பேர் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறுவர்கள் மத்தியில் டெங்கு நோய் அதிகரித்து வரும் நிலையில் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மாத்திரம் 35 சிறுவர்கள் சிகிச்சைபெற்று வருவதாக அதன் பணிப்பாளர் டாக்டர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால், டெங்கு பரவும் வேகம் அதிகரித்துள்ளது.

06

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் 7,500 பேருக்கு நாளை நியமனம்

### பட்டதாரிகள் ஆசிரியர்களாக மேலும் 5,500 பேர் இணைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியுள்ள 7,500 பேருக்கு நாளைய தினம் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், மொழி மற்றும் வாணிபம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் மூன்று மொழிகளிலும் கற்பிக்கக் கூடிய 5,500 பட்டதாரி

06

## மின்சாரம் தாக்கியதில் 02 பேர் ஸ்தலத்தில் பலி

### மட்டக்களப்பில் நேற்று சம்பவம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு, அமிர்தகழி பிரதேசத்தில் வீடொன்றின் மேல்மாடிக் கூரையை திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தச்சுத் தொழிலாளர்கள் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி இருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்

06

# நாட்டை மேம்படுத்தும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு SLPP தொடர்ந்து ஆதரவு

## 'செயல் திறன் கொண்ட செயலணி' ஜனாதிபதியிடம் உள்ளதாக ரணிலை சந்தித்த கட்சியின் அமைப்பாளர் பெசில் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நாட்டை மேம்படுத்தும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக அரசாங்கத்தின் முக்கிய கட்சியான பொதுஜன பெரமுனவினால் இதுவரை பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒத்துழைப்பை எதிர்காலத்திலும் தொடர்ந்து பெற்றுக் கொடுக்கவுள்ளதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த வேளையில் தெரிவித்துள்ளார்.

தான் உள்ளிட்ட பொதுஜனபெரமுன கட்சி அண்மைக் கால சரித்திரத்தில் பல ஜனாதிபதிகளுடன் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அனுபவங்களுக்கு அமைய எந்த ஒரு ஜனாதிபதிக்கும் இல்லாத விதத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் செயல் திறன் கொண்ட செயலணி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வசம் உள்ளதாகவும் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதியுடன் அரச கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி காரியாலயத்தில் நேற்று(14) நடத்திய விசேட கலந்துரையாடலின் போதே பெசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அரச

06



### நாட்டிலுள்ள 52 பிரதேச செயலகங்கள் ஊடாக



# கடவுச்சீட்டு இன்று முதல் Online மூலம் விநியோகம்

### ஜனாதிபதி ரணில் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்

### வழமை போன்று ஒரு நாள் சேவை, அவசியமானால் எவரும் திணைக்களத்துக்கு நேரடியாக வருகை தர முடியும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**






கடவுச்சீட்டுக்களை ஒன்லைன் மூலமாக விநியோகிக்கும் வேலைத் திட்டம் இன்று (15) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இன்றைய தினம் முற்பகல் ஹோமாகம பிரதேச செயலகத்தில் இச்செயற்திட்டம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். கடவுச்சீட்டு விநியோகிக்கும் ஒரு நாள் சேவைகள் வழமை போன்று இடம் பெறுவதாக தெரிவித்துள்ள அவர், ஒன்லைன் மூல விநியோகம் நடைபெற்ற போதும் அவசியமானால் எவரும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு நேரடியாக வருகை தந்து, அதற்கான விண்ணப்பத்தை ஒப்படைக்கவும் முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இப்புதிய வேலைத் திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்ததன் பின்னர் மூன்று தினங்களுக்குள் கடவுச்சீட்டு கூரியர் சேவைக்கு ஒப்படைக்கப்படும். அதனையடுத்து அதனை வீட்டுக்கே பெற்றுக் கொள்ளவும் முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். குடிவரவு, குடியகல்வு திணைக்களமானது மக்களுக்காக சிறந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் கடவுச்சீட்டுக்காக ஒன் லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

06

## KKS துறைமுக புதிய பயணிகள் முனையத்தில் "MV Empress" கப்பல்

### அமைச்சர் நிமல் நாளை யாழ். விஜயம்



இலங்கை துறைமுக அதிகார சபையால் 450 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட காங்கேசன்துறை நவீன பயணிகள் முனையம், விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நாளை (16) திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்புதிய முனையத்துக்கு அன்றைய தினம் இந்தியாவின் முதலாவது அதிசொகுசு பயணிகள் கப்பலான எம்.வி எம்பிரஸ் "MV Empress" வந்தடையவுள்ளது. இதில் வரும் 800 பயணிகளுக்கு

06

## இலங்கைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிக அவசியம்

### USA திறைசேரி செயலாளர் தெரிவிப்பு



இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடி நிலைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமென அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனெட் ஜெலென் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட வேண்டியதும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் நடவடிக்கைகளை அவதானித்து வருவதுடன், கடந்த ஆறு

06

## A/L 40 பாட விடைத்தாள் மதிப்பீடு இன்று ஆரம்பம்

### 39 மத்திய நிலையங்கள் தயார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் உள்ளிட்ட 40 விடய தானங்களுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள், இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் லசிக்க சமரகோன் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, நாடளாவிய ரீதியில் 18 நகரங்களிலுள்ள 39 மத்திய நிலையங்களில் பரீட்சைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது.

இந்நடவடிக்கைகளில் 519 குழுக்கள்

06

## பஸ் கட்டணங்கள் ஜூலை முதல் குறையும்

### போக்குவரத்து அமைச்சு உறுதி



பஸ் கட்டணங்களை எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் 20 வீதத்தினால் குறைக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தேசிய கொள்கைக்கமைய

06



பாதுகாப்பற்ற முறையில் பயணிகளுடன்
**ரயில் பாதையின் குறுக்கே பஸ்சை செலுத்திய சாரதி**

03



**தனியார் வகுப்பு கட்டணங்களால் பெற்றோர் பலரும் அதிருப்தியில்**
அதிகரித்த மாதாந்த கட்டணங்களால் திண்டாட்டம்

03

## SLPPக்கே மக்கள் ஆணை உள்ளது ஆட்சியை தீர்மானிப்பதும் நாமே

### நாமல் MP தெரிவிப்பு



இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கே உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும், அதில் பொதுஜன பெரமுனவே வெற்றி பெறும் என்றும், இதற்கு மக்கள் ஆணை வழங்குவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன்

06

## உலகில் அதிகளவு எடையுள்ள சிறுநீரக கல்லை அகற்றி சாதனை

### இலங்கை இராணுவ வைத்தியர்கள் கின்னஸ் சாதனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரிய சத்திரசிகிச்சை மேற்கொண்டு சாதனை படைத்துள்ள இலங்கையைச் சேர்ந்த

06







ஐந்தாண்டு வேலைத்திட்டத்தின் கீழ்

# அநுராதபுரம் மாவட்ட வறிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்க விசேட திட்டம்

## மாவட்ட செயலாளர் தலைமையில் விசேட கூட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள 45 கிராமிய பகுதிகளில் வறிய நிலையில் வாழும் மக்களை தெரிவு செய்து, அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் ஐந்தாண்டு வேலைத்திட்டம் ஒன்று 2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரையான காலப் பிரிவில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த (09) அநுராதபுரம் சீதேவி ஹோட்டலில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் நடைபெற்றது.

ரஜரட்ட சன சமூக பிரஜா மற்றும் எஃபெக்ட் சிவில் சமூக அமைப்புகளை இணைத்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்திற்கு பலாகல, பதவிய, கெப்பித்திகொல்லாவ, விலச்சிய, கஹட்டகஸ்திகிலிய மற்றும் கல்நேவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் ஊடாக உதவி பெற வேண்டிய குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக Monlar என்ற அமைப்பு



ரஜரட்ட சனசமூக நிலையம் மற்றும் We Effect Institute ஆகியன இதற்கு ஆதரவை வழங்கி வருகின்றன.

இதன்படி, பதவிய பிரதேச செயலகப் பிரிவில் 12 கிராமங்களில் 1144 குடும்பங்களும், கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தின் ஆறு கிராமங்களில் 590 குடும்பங்களும், கெப் பிதிகொல்லாவ பிரதேசத்தின் ஆறு கிராமங்களில் 580 குடும்பங்களும், கல்நேவ பிரதேசத்தில் 06 கிராமங்களில் 745 குடும்பங்களும், விலச்சிய பிரதேசத்தின் 09 கிராமங்களில் 623 குடும்பங்களும், பலாகல பிரதேசத்தில் 07 கிராமங்களில் 713 குடும்பங்களுக்கும் இந்த வேலைத்திட்டதிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்த அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர, இலங்கையை நல்ல நாடாக அபிவிருத்தி செய்யும் கொள்கையை அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கொண்டிருக்க வேண்டும்.

பல பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான மனோபாவத்தை வலுப்படுத்தும் செயற்பாட்டிற்கு ஒவ்வொருவரும் தங்களால் இயன்றளவு நேர்மையான சேவையை வழங்க வேண்டும் எனவும் மாவட்ட செயலாளர் இதன் போது கேட்டுக் கொண்டார்.

காலி மாவட்டத்திற்கான

# நீர் வளப் பாதுகாப்பு செயலமர்வு இன்று கடவத்சதர செயலகத்தில்

**(பேருவளை விசேட நிருபர்)**



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நாடளாவிய ரீதியில் நீர் வளம் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளை நடாத்தி வருகிறது. இவ் வேலைத்திட்டத்தின் கீழ், காலி மாவட்டத்திலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான செயலமர்வு தற்போது பிரதேச செயலக ரீதியாக இடம் பெற்று வருகிறது.

கிராம அதிகாரிகள், சமுர்த்தி அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்காக இவ்வாறு நீர் வளப்பாதுகாப்பு, நீர் வீண்விரயம், நீர் மாசடைதல் மற்றும் மழைநீர் சேமிப்பு தொடர்பில் செயலமர்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், இன்று (15) வியாழக்கிழமை காலி மாவட்டத்துக்குட்பட்ட கடவத் சதர பிரதேச செயலகத்தில் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜூன் 22ஆம் திகதி ஹிக்கடுவ பிரதேச செயலகத்திலும், ஜூலை 6ஆம் திகதி வெலிவிட்டிய திவிதுர பிரதேச செயலகத்திலும், ஜூலை 12ஆம் திகதி பெந்தோட்டை பிரதேச செயலகத்திலும், ஜூலை 27ஆம் திகதி அக்மீமன பிரதேச செயலகத்திலும் இச் செயலமர்வுகள் இடம்பெறவுள்ளன.



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ அவர்களின் அன்னதான சாலை சங்கமித்த மாவத்தையில் நடைபெற்றது. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் இதில் கலந்து கொண்டார். (படம்: எம். நசார்)

# வை.எம்.எம்.ஏ பேரவை முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் காலமானார்

**ருஸைக் பாரூக்**



அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் அல்ஹாஜ் ரூமி மொஹமட் தனது 75வது வயதில் நேற்று முன்தினம் (13) இரவு காலமானார். 1994 முதல் 1995 வரை வை. எம். எம். ஏ.யின் 36வது தேசியத் தலைவராக இருந்து மக்கள் சேவையாற்றியவர்.

அன்னார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் ஹலீம் இஷாக்கின் மருமகனும், முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் ஹஜ் கமிட்டி உறுப்பினருமான ஹனிபா இஷாக்கின் மைத்துனருமாவார்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேள்விப்பட்டு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அன்னாரின் பொரளை இல்லத்திற்குச் சென்று இறுதிமரியாதை செலுத்தினார். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளானோர் ஜனாஸாவில் கலந்து கொண்டனர். அன்னாரின் ஜனாஸா நேற்று குப்பியாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# 2023 ஆம் ஆண்டின் தரவரிசையில் கொழும்பு பல்கலைக்கழகம் முன்னேற்றம்

ஜூன் 2023 இல் டைம்ஸ் உயர் கல்வியின் (THE) தாக்கத் தரவரிசையின் ஐந்தாவது பதிப்பில் 401வது 600வது இடத்துக்கு இடையே கொழும்பு பல்கலைக்கழகம் முன்னேறியுள்ளது.

Impact தரவரிசையானது பல்கலைக்கழகங்களுக்கான உலகளாவிய அளவுகோலாக செயல்படுகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs). ஒட்டுமொத்த தரவரிசையில் 601 வது முதல் 800



வது இடத்திற்கு இடையில் பல்கலைக்கழகம் நிலைநிறுத்தப்பட்டது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தரவரிசையில் கொழும்பு பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த ஆண்டு, ஒட்டுமொத்த தரவரிசையில் 112 நாடுகள், பிராந்தியங்களைச் சேர்ந்த 1591 பல்கலைக்கழகங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கடந்த சில ஆண்டுகளாக ஆராய்ச்சி, கற்பித்தல், சமூகம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் செய்யப்பட்ட படிப்படியான மேம்பாடுகளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னேற்றம் பிரதிபலிக்கிறது.



தேசிய சேமிப்பு வங்கியின் தேசிய ஊழியர் சங்கத்தினால் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு கௌரவமளிப்பதோடு உயிரிழந்த ஊழியர்கள் இருவருக்கு ஜனசக்தி காப்புறுதி இழப்பீட்டு பணம் வழங்கி வைக்கும் நிகழ்வு ஐ.தே.க உப தலைவரும் தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவருமான அகில விராஜ் காரியவசம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படம்: சுதத் நிசாந்த)

# பண மோசடியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நகரசபை உறுப்பினர் கைது

## இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறந்த வட்டியைப் பெற்றுத்தருவதாகக் கூறி ஒரு ஒரு கோடியே 17 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நகரசபை உறுப்பினரான டுமான் கோரலகே சிறியாணி லதா பெரேரா என்ற பெண்ணுக்கு கஸ்பாவ நீதிமன்றம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

பிலியந்தலை மக்குழுதுவ பிரதேசத்தைச் சேர்ந்த டுமான் கோரலகே சிறியாணி லதா பெரேரா என்ற இந்த 53 வயதான பெண் இதுபோன்ற பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் கஸ்பாவ நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து எதிர்வரும் 23 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் கஸ்பாவ மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் சுனேத்ரா பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பெண் கட்சியின் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு நிதி வழங்குவதாகவும் பல உறுப்பினர்களதும் பெயர்களை உபயோகித்து 3 இலட்சம் முதல் 25 இலட்சம் வரையான நிதியை கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இதுவரை மோசடி செய்துள்ளதாகவும் அவர் தொடர்பான முறைபாடுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அவர் தொடர்பில் 11 பெண்கள் பொலிஸில் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் கடிதம் சந்தேக நபரை அடையாளஅட்டையின் பிரதி ஆகியவை முறைப்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் பொலிஸார் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# புத்தளம் கட்டுமான சேவை வழங்குனர்களின் கூட்டம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் கட்டுமான சேவை வழங்குனர்களின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கம் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடலொன்று கட்டுமான சேவை வழங்குநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அபிவிருத்தி சேவைகளை வழங்கும் துறைசார் சங்கங்களின் கூட்டு நல்லுறவை விருத்தி செய்துகொண்டு பொது மக்களுக்கு உச்ச கட்ட சேவையை வழங்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடலில் முன்னேற்றகரமான பல முன்மொழிவுகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

கட்டுமான சேவை வழங்குநர் சங்கத்தின் தலைவர் எஸ்.எம். அன்வர், செயலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், பொருளாளர் எச்.ஓ.எம். பைரூஸ் உட்பட அதன் நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பஞ்சாப்பில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில்

# அல் ஹுமைஸரா மாணவன் தொடர் நாயகன் விருதுக்கு தெரிவு

**(அஜ்வாத் பாஸி)**

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கட் சுற்றுப் போட்டியில் இலங்கையிலிருந்து சென்ற 'டைடன்ஸ் ஜூனியர்' அணியை பிரதிநிதித்துவப்படுத்தி அணியின் உபதலைவராக களமிறங்கி விளையாடி அணியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்த பேருவளை சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 09ஆம் வகுப்பில் கல்வி கற்கும் அஹமட் ஹிசாம் (வயது 13) தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்து தொடர் நாயகன் விருதையும் தனதாக்கிக் கொண்டு தனது நாட்டிற்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இளம் வீரரான அஹமட் ஹிசாம், தான் கல்விகற்கும் அல் ஹுமைஸரா தேசியப் பாடசாலையின் 15வயதுக்குட்பட்ட கிரிக்கட் அணியில் தற்போது விளையாடி வருவதோடு, அல் ஹுமைஸரா எதிர் பயாகலை , பண்டாரநாயக்க பாடசாலை அணிக்கு எதிராக ஒருநாள் போட்டியின்போது ஆட்ட நாயகனாகவும் இவர் தெரிவு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.





அஹ்மத் ஹிஷாம் கொழும்பு சி.சி.சி, களுத்துறை என்.ஆர் அகடமி மற்றும் அளுத்கமை ஆர்.சி அகடமிகளுக்கான போட்டிகளில் விளையாடி வருகிறார். இவர் களுத்துறை மாவட்ட 15 வயதுக்கு உட்பட்ட அணியிலும் இணைந்து திறமைகளை வெளிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் இரத்ததான முகாம்



உலக குருதிக் கொடையாளர் தினமான (ஜூன் 14) நாட்டில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக சம்மாந்துறை உயர் தொழிநுட்பவியல் நிறுவனம் மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி என்பன இணைந்து ஏற்பாடு செய்த இரத்த தான முகாமில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, உயர் தொழிநுட்ப நிறுவன பணிப்பாளர் எஸ். எல். முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டபோது...

# கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ரூ. 7000 பெறுமதியான பொதிகள்



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

குறைந்த வருமானம் பெறும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான முக்கிய பொருட்கள் அடங்கிய பொதிகள் இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கை கனடா இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் நிதியுதவியில் (13) பகிர்ந்தளிக்கப்பட்டன. அமைப்பின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கனடா இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் தலைவி பெரோஸா காசிம் பயனாளிகளுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்.

மூவினத்தையும் சேர்ந்த கர்ப்பிணித்தாய்மார்களுக்கு மேற்படி பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் சுய தொழிலுக்காக வருமானம் குறைந்த பெண் ஒருருக்கு தையல் இயந்திரம் ஒன்றும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

# தனியார் பஸ்ஸொன்றுடன் சொகுசு பஸ் மோதி விபத்து



**திறப்பனை தினகரன் நிருபர்**

கதுறு வெலயிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கல்குளம் ஞானிக்குளம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், நுவரெலியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசு பஸ் வண்டி (11) நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது. யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த பயணிகள் குழுவொன்று நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்ஸின் பின்பகுதியும், சொகுசு பஸ்ஸின் முன்பகுதியும் பலத்த சேதத்துக் குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜூன் 15 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN


**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.12
அஸர் - 03.39
மஃரிப் - 06.27
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆனி 01
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## 500 மெகாவோட் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள
# மன்னார், பூநகரியில் அதானி குழுமம் மின்சார உற்பத்தி
### நிர்மாணப் பணிகள் 2024 டிசம்பர் நிறைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் அதானி குறூப் நிறுவனம் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள மின்சார உற்பத்தி திட்டங்களின் நிர்மாணப் பணிகள், அடுத்த வருட டிசம்பர் மாதத்தில் நிறைவடையும் என மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதானி குரூப் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் மின் சக்தி, எரிசக்திஅமைச்சில் இடம் பெற்ற விசேட பேச்சு வார்த்தையையடுத்தே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். மன்னாரிலும் பூநகரியிலும் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சக்தி திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. இதன் மூலம் 500 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் தொகுதிக்கு இணைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேற்படி மின்உற்பத்தி திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பிலே, இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.இதில், அதானி குரூப் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான அனில் சர்தானா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இலங்கையின் சார்பில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தலைமையிலா ன உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேற்படி மின்சார உற்பத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது எதிர்கொள்ள நேரும் சிக்கல்கள், சவால்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான காலம் தொடர்பிலும் இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டது.

## இறக்காமம் விவசாயிகளுக்கு உரமானிய பண உறுதிச்சீட்டு
### 2421 பேருக்கு 451 இலட்சம் ரூபா

இறக்காமம் தினகரன் நிருபர்

இறக்காமம் பிரதேச விவசாயிகள் 2421 பேருக்கு 451 இலட்சம் ரூபாய் பெறுமதியான உரமானியத்திற்கான பண உறுதிச் சீட்டு வழங்கி வைப்பு

அரசினால் முன்மொழியப்பட்ட விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கும் திட்டத்திற்கமைய இறக்காமம் கமநல சேவை பிரிவிற்குட்பட்ட 2,421 விவசாயிகளுக்கு உரமானியத்துக்கான உறுதி சீட்டு வழங்கி வைக்கும் நிகழ்வு கமநல சேவை கேட்போர் கூடத்தில் நேற்று (14) இடம்பெற்றது.

இறக்காமம் கமநல சேவை நிலையத்தின் விவசாய போதனாசிரியர் எஸ்.ஏ.எல்.பௌமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 16 விவசாய அமைப்புகளின் கீழ் செய்கை பண்ணப்பட்டு வரும் 5641 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு தலா 8,000 ரூபாய் வீதம் 451 இலட்சம் ரூபா பெறுமதியான பண உறுதிச் சீட்டு வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த பண உறுதி சீட்டை பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட தனியார் உர விற்பனை 06

### அந்நிய செலாவணி வெளிச்செல்லாது
## 06 மாதங்கள் மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பை தொடர்ந்தும் பேணுவதற்கு, அந்நியசெலாவணி நாட்டிலிருந்து வெளியில் செல்வதை தடுக்கும் வகையில் அதனை ஆறு மாதங்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆறு மாத காலத்திற்கு வெ ளிநாட்டு அந்நிய செலாவணி நாட்டிலிருந்து வெளியே செல்வதை மட்டுப்படுத்தும் வகையில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ளார். வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் டொலரின் அளவு அதிகரித்துள்ளமை, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் நாட்டுக்குக் கிடைக்கும் வருமானம் ஆகியவை மூலம் நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு 3.5 பில்லியன் அமெரிக்கன் டொலராக காணப்படுகிறது.

அவ்வாறு அதிகரித்தாலும் இந்த அளவு போதுமானதல்லதென, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இலங்கையானது பொருளாதார நெருக்கடிக்குள் அகப்படுவதற்கு முன்பதாக 8.2 பில்லியன் அமெரிக்கன் டொலரை உத்தியோக பூர்வ கையிருப்பாகக் கொண்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், மத்திய வங்கி முன்வைத்த 06

### யாழ்.கொழும்புத்துறையில்
## 11 முன்பள்ளி மாணவர்களுடன் சென்ற முச்சக்கரவண்டி விபத்து
### சாரதியுடன் 12 பேருக்கும் காயம்

(யாழ்.விசேட நிருபர்)



11 முன்பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், சாரதியுடன் 12 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதிகளவிலான முன்பள்ளி மாணவர்களை ஏற்றி சென்று விபத்துக்குள்ளானதிலேயே இவர்கள் காயமடைந்துள்ளனர். முச்சக்கர வண்டியின் சாரதியும் காயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முன்பள்ளி ஒன்றுக்கு 11 மாணவர்களை ஏற்றி சென்ற முச்சக்கர வண்டி வீதியோரமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. காயமடைந்த 12 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 06

### பாதுகாப்பற்ற முறையில் பயணிகளுடன்
## ரயில் பாதையின் குறுக்கே பஸ்ஸை செலுத்திய சாரதி
### அலவ்வ பகுதியில் பஸ் சாரதி கைது

கொழும்பு – குருநாகல் மார்க்கத்தில் அலவ்வ பிரதேசத்தின் ரயில் பாதையின் குறுக்கே, பஸ்ஸை பாதுகாப்பற்ற முறையில் செலுத்திய சாரதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (13) காலை ஏழு மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் பாரிய விபத்து தவிர்க்கப்பட்டதாகவும் பொல்கஹவெல போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.



ரயில் கடவையினூடாக பஸ்ஸை கவனக்குறைவாக செலுத்தி, பயணிகளை கொல்ல முயற்சி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே, பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் 06

## தனியார் வகுப்பு கட்டணங்களால் பெற்றோர் பலரும் அதிருப்தியில்
### அதிகரித்த மாதாந்த, சேர்க்கை கட்டணங்களால் திண்டாட்டம்

உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களை கற்பிப்பதற்கு பல ஆசிரியர்கள் அதிகளவான பணத்தை வசூலிப்பதாக பெற்றோர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக ஒரு பாடத்துக்கு மாதாந்த கட்டணமாக 03,500 ரூபா தொடக்கம் 04,000 ரூபாவரை பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாதாந்தக் கட்டணம் தவிர சேர்க்கைக் கட்டணமும் தனித்தனியாக வசூலிக்கப்படுவதாகவும் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, இந்நேரத்தில் ஆசிரியர்கள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் தங்களது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.



எனவே, தனியார் வகுப்புகளில் வசூலிக்கப்படுகின்ற கட்டணம் குறித்து அரசு சில விதிமுறைகளை உருவாக்க வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனியார் கல்வி நிலையங்களை பராமரிப்பதற்கு அதிகளவான பணியாளர்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே மாணவர்களிடமிருந்து 06

### உயிர்த்த ஞயிறு தாக்குதல் குறித்த உண்மைகள்:
## உறுதுணையாக இருந்தவர்கள் ஊடாக விரைவில் வெளிவரும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலின் பின்னணியில் காணப்படும் உண்மைகள் விரைவில் வெளிவருமென, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் அதனை மறைக்க முற்பட்டாலும் தெய்வம் அதனை வெளிக்கொண்டுவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழாவின் போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவித்த பேராயர், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் 06



## தமிழகத்திலிருந்து ஆடைகள் கடத்தும் முயற்சி முறியடிப்பு
### இராமேஸ்வரத்தில் 05 பேர் கைது

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு ஆடைகள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய, தமிழக பொலிஸார் 05 பேரை கைது செய்து, ஆடைகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தங்கச்சிமடம் சூசையப்பர்பட்டினம் கடற்கரை பகுதியில் முச்சக்கரவண்டியில் ஏற்றி கொண்டுவரப்பட்டு மீன்பிடி படகில் ஏற்றுவதற்காக தயாராகவிருந்த பொதியையே, பொலிஸார் கைப்பற்றி சோதனை நடத்தினர். அந்தப் பொதியில் ஆண்கள் மற்றும் பெண்கள் அணியும் காற்சட்டை, டீ சேர்ட், நைட்டி குழந்தைகளுக்கான ஆடைகள் உள்ளிட்ட பலவிதமான ஆடைகள் இருப்பது தெரிய வந்தது. ஆடைகளை இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு வந்த இராமேசுவரம் வடக்கு தெருவைச் சேர்ந்த 5 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். 06

## எதிர்கால அபிவிருத்தியை விரும்பாதோரே சமூகத்தில் குரோதத்தை உருவாக்க முயற்சி
### பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் எதிர்கால அபிவிருத்தியை விரும்பாதவர்களே குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சமூகத்தில் குரோதங்களை உருவாக்கி வருவதாக, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களூடாகவே, இவ்வாறு இவர்கள் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், வரலாற்றை சரியாக தெரிந்துகொள்ளாதவர்கள் பாராளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தென்பகுதியில், பொது போக்குவரத்துக்காக பஸ் வண்டிகளைக் கையளிக்கும் நிகழ்வொனறில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டில் இலவசக் கல்வி, சுயாதீனமான சுகாதாரத்துறை மற்றும் பாராளுமன்றம் என்பன சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. இது பற்றிய விடயங்களை அறியாதவர்களே வெறுமனே பாராளுமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நாட்டில் எதிர்கால அபிவிருத்தியை விரும்பாதவர்களே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். 06



கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ. பி மதன் ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் வழங்கிய போது எடுத்த படம்.

## நீர் விநியோகத்தை துண்டித்த ஊழியரின் மீது தாக்குதல்
### தங்காலையில் வீட்டுரிமையாளர் கைது

வீட்டின் நீர்விநியோகத்தை துண்டித்த ஊழியர் மீது தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். தங்காலை, தங்கெட்டியவீர மாவத்தையில் இச்சம்பவம் இடம்பெற்றது. வீட்டுக்குள் இருந்தவரே இத்தாக்குதலை நடத்தினார்.இதில், தாக்கதலுக்குள்ளான நீர் வழங்கல் சபையின் ஊழியர் தங்காலை போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 06

National Lotteries Board — செவ்வாய்க்கிழமை 2023.06.13 — www.nlb.lk

| சீட்டிழுப்பு | இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / விசேட | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5144 | ரூ. 11,166,285.00 | B | 6 2 9 1 4 9 |
| Mega Power | 1492 | ரூ. 329,477,174.00 | C, 10 | 34 60 61 75 |
| கொவிசெத | 3386 | ரூ. 62,497,067.20 | C | 20 24 26 74 |
| ராசி ஜய மலை | 453 | ரூ. 2,500,000.00 | | 36 50 59 62 |
| ஜாதிக சம்பத | 1599 | ரூ. 12,381,308.72 | | 9 8 3 4 5 8 |
| தன நிதானய | 1174 | ரூ. 94,649,060.40 | X | 20 47 52 58 |

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 187.20 | 198.68 |
| கனடியன் டொலர் | 210.97 | 223.72 |
| யூரோ | 304.19 | 321.09 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.03 | 222.35 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 353.88 | 372.53 |
| சுவிஸ் பிராங்க் | 311.71 | 330.77 |
| அமெரிக்க டொலர் | 285.61 | 298.85 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 775.31 | கட்டார் ரியால் | 80.18 |
| குவைத் டினார் | 950.18 | சவூதி ரியால் | 77.93 |
| ஓமான் ரியால் | 759.21 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 79.58 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 01ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 25

## குறள் தரும் சிந்தனை



துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்

மது அருந்துவோர்க்கும் நஞ்சு அருந்துவோர்க்கும் வேறுபாடு கிடையாது என்பதால் அவர்கள் தூங்குவதற்கும் இறந்து கிடப்பதற்கும்கூட வேறுபாடு கிடையாது என்று கூறலாம்.

# பொருளாதார நெருக்கடியினால் கற்றுக் கொண்ட அனுபவங்கள்

எமது நாடு கடந்த வருடம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடி நாட்டுக்கும் மக்களுக்கும் பல்வேறு விதமான பாடங்களையும் அனுபவங்களையும் கற்றுக் கொடுத்துள்ளது. குறிப்பாக பொருளாதாரரீதியில் வசதி படைத்தவர்கள், நடுத்தரமானவர்கள், குறைந்த வருமானம் பெறுபவர்கள், வறுமைக்கு உள்ளாகியுள்ளவர்கள் என சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் இந்த பாடங்களையும் அனுபவங்ளையும் பெற்றுள்ளனர்.

ஒவ்வொருவரும் அவரவர் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இந்நெருக்கடியின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறான அனுபவங்களையும் பாடங்களையும் இந்நாட்டு மக்கள் முன்னொரு போதும் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

அதனால் இவ்வாறான ஒரு நெருக்கடிக்கு இந்நாடு இனியொரு போதும் முகம்கொடுத்திடக் கூடாது என்பதுதான் அனைவரதும் வேணவாவாக உள்ளது. இப்பொருளாதார நெ ருக்கடி சுயபொருளாதாரத்தில் முன்னேற்றத்தை யும் தன்னிறைவையும் அடைந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் எடுத்துக்காட்டியுள்ளது. பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைந்து கொள்ளும் போது எவரிலும் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்படாது. அதனைக் கருத்தில் கொண்ட பெரும்பாலானவர்கள் பொருளாதார ரீதியில் சுயமாக எழுந்து நிற்பதன் அவசியத்தை உணர்ந்துள்ளார்கள். அது குறித்து கவனமும் செலுத்தியுள்ளார்கள். இது தொடர்பில் பல தசாப்தங்களுக்கு முன்னர் கவனம் செலுத்தி செயற்பட்டிருந்தால் இவ்வாறான நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும். அது தான் அநேகரது கருத்தாக உள்ளது.

இலங்கையானது வருடத்தில் 365 நாட்களும் வாழ்வதற்குத் தேவையான சீதோஷண நிலையையும் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமான வசதிகளையும் வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக உணவு உற்பத்தி பொருளாதாரத்திற்கு அவசியமான அனைத்து வளங்களையும் கொண்டதொரு நாடாக மாத்திரமல்லாமல், இயற்கை வளங்கள் நிறைந்த பூமியாகவும் விளங்குகிறது இலங்கை.

அதன் பயனாகவே இந்நாடு கி.பி. 1505 வரையும் சுயபொருளாதாரத்தில் முழுமைத்துவம் பெற்றதாக விளங்கியது. ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கிய இந்நாட்டில் இருந்து பல பொருட்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆன போதிலும் 1505 இல் போர்த்துக்கேயரின் வருகையோடு ஆரம்பமான ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் விளைவாக உள்நாட்டு உணவு உற்பத்தியுடனான தன்னிறைவுப் பொருளாதாரம் சுயத்தை இழந்து பாதிப்படைந்தது. இந்நிலையானது 443 வருடங்கள் கடந்த நிலையில் 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னரும் நீடிக்கவே செய்தது. சுதந்திரத்தின் பின்வந்த ஆட்சியாளர்களும் ஆளுக்கொரு பொருளாதாரக் கொள்கையை முன்னெடுத்தமை அதற்கு பக்கத்துணையானது. அதனால் சுதந்திரமடைந்து 70 வருடங்கள் கடந்தும் கூட 1505 இக்கு முன்னரான பொருளாதார முன்னேற்றத்தை இன்னும் அடைந்துகொள்ள முடியாதுள்ளது.

இவ்வாறான பின்புலத்தில்தான் 2022 இன் ஆரம்பப் பகுதியில் இந்நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. இதன் ஊடாக இந்நாட்டவர்கள் பெற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களில் ஒன்றாக உள்ளூர் உற்பத்தியின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

இந்த நிலையில் உலக வங்கி, இலங்கையின் இவ்வருட பொருளாதார வளர்ச்சி மறை 4.2 வீதமாக இருக்குமெனவும் சர்வதேச நாணய நிதியம் மறை 3.0 வீதமாக இருக்குமெனவும் கணிப்பிட்டுள்ளது. ஆனால் இலங்கை மத்திய வங்கி, பொருளாதார வளர்ச்சி விகிதம் மறை 2 3 இடையில் இருக்குமெனக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நிதி இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய, 'சர்வதேச நாணய நிதியம் பலவிதமான கணிப்புக்களை முன்வைத்த போதிலும், அத்தகைய கணிப்புகளுக்கு அப்பால் கடந்த வருடமும் பொருளாதாரத்தை எம்மால் நிர்வகிக்க முடிந்தது' என்றும் 'இவ்வருடத்தின் இறுதிக் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் சாதகமானதாக இருக்கும். அதனால் உள்ளூர் உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிக்க அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும்' என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் இராஜாங்க அமைச்சர் குறிப்பிடுவது போன்று, இந்நாட்டின் பொருளாதாரம் குறித்து சர்வதேச நிறுவனங்கள் எவ்விதமான கணிப்பீடுகளை மேற்கொண்டாலும் உள்ளூர் உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிப்பது அவசியம். அதற்காக அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும். கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி வலியுறுத்தி நிற்கும் பிரதான விடயங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஆகவே பொருளாதார நெருக்கடி கற்றுத் தந்துள்ள பாடங்களையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தன்னிறைவுக்கான உற்பத்தி பொருளாதாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நியாயமான அரசியல்தீர்வை வலியுறுத்தும் யதார்த்தமான அரசியல்வாதி ஆனந்தசங்கரி

## 90 ஆவது அகவையில் இன்று



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் மூத்த தமிழ் அரசியல்வாதியுமான வீ.ஆனந்தசங்கரியின் 90ஆவது பிறந்த தினம் இன்றாகும். அவர் தனது அரசியலில் சாதித்த விடயங்கள் ஏராளம். ஆனாலும் தனது பணிகளை வெளியுலகுக்கு பறைசாற்றிக் கொள்ள விரும்பாத எளிமையான அரசியல்வாதி அவராவார்.

கொழும்பில் தனது அரசியல் பணியை ஆரம்பித்த அவர் ஆரம்பத்தில் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அதன் பின்னர் 1962இல் கிளிநொச்சி தொகுதியில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக அன்று விளங்கிய பூநகரி பகுதியில் ஆசிரியராக கடமையாற்றத் தொடங்கினார்.

தனது ஆசிரியத் தொழிலுடன் மக்களின் துன்பங்களிலும் பங்கெடுத்து பணியாற்றினார்.

அன்றைய காலத்தில் யாழ். மாவட்டத்தோடு கிளிநொச்சி தொகுதி இணைந்திருந்தது. மோசமாகப் பின்தங்கியிருந்த கிளிநொச்சி தொகுதியின் கல்வி நிலைமை அக்காலத்தில் மிகவும் மோசமாக இருந்தது. அடிப்படை வசதிகள் இல்லாத பிரதேசமாக கிளிநொச்சி இருந்தது. கல்வியைப் பெற்றுக் கொள்ள வழியின்றி மாணவர்கள் திண்டாடினர்.

கிளிநொச்சி தொகுதியில் ஏழை விவசாயிகள் பலர் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். இரணைமடு குளத்துநீரை சிறு கமக்காரர்கள் பெறுவதில் சில தடைகள் இருந்தன. அந்த தடைகள் எல்லாவற்றையும் தனது முயற்சியால் நீக்கியவர் ஆனந்தசங்கரி.

இலங்கையின் பாட்டாளிகளுக்காக குரல்கொடுப்பதற்கு லங்கா சமசமாஜ கட்சியே முன்னின்று செயற்பட்ட அக்காலத்தில் அக்கட்சியில் ஏற்கனவே இணைந்திருந்த ஆனந்தசங்கரி, அக்கட்சியின் செயற்பாடுகளை கிளிநொச்சியில் விஸ்தரித்தார்.

### இலங்கையில் இனரீதியான முரண்பாடுகள் இன்றி ஐக்கியம் நிலைக்க வேண்டுமானால் இந்திய 'மொடல்' சிறந்தது என்பதே சங்கரியின் கருத்து

அங்கு நடைபெற்ற கிராமசபைத் தேர்தலில் போட்டியிட்டு கரைச்சி கிராமசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பாட்டாளி மக்களின் ஆதரவுடன் கிளிநொச்சி பட்டினசபை தலைவராகவும் தெரிவானார். பின்னர் சமசமாஜ கட்சியிலிருந்து பிரிந்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். 1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடினார். நலிவுற்ற மக்களின் ஆதரவு அவருக்குக் கிடைத்திருந்தது.

1972 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவான போது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களில் இருவர் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டனர். ஆனந்தசங்கரி அவர்கள் எனைய தமிழ் காங்கிரஸ் கட்சி பிரமுகர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து செயற்படத் தொடங்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 1977ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் கிளிநொச்சி தொகுதியில் போட்டியிட்டு இரண்டாவது முறையாகவும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் கிளிநொச்சி பிரதேச மாணவர்கள், கல்வியில் முன்னேற்றம் காண வேண்டுமானால் கிளிநொச்சி தொகுதி தனிமாவட்டமானால் மட்டுமே அவர்களால் பல்கலைக்கழகம் செல்ல முடியும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளே உட்கட்சிப் போராட்டத்தை நடத்தினார்.

ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்த நிலையிலும் கிளிநொச்சித் தொகுதியை தனது விடாமுயற்சியினால் தனிமாவட்டமாக்கினார். அதன் விளைவுதான் இன்று பல வைத்தியர்களும், பொறியியலாளர்களும், சட்டத்தரணிகளும், பட்டதாரிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாகியுள்ளனர். இது ஆனந்தசங்கரி அவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

2001ஆம் ஆண்டளவில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது. 2002ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வீ. ஆனந்தசங்கரி, யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளில் முதலாவதாக அதிகப்படியான வாக்குகள் பெற்று மீண்டும் வெற்றி பெற்றார்.

பலவிதமான அச்சுறுத்தல்கள் நிலவிய போதிலும், தனது உயிருக்கு இருந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது உயிரை துச்சமென நினைத்து வெளிப்படையான அரசியல் நடத்தி வருபவராக ஆனந்தசங்கரி திகழ்கின்றார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது யுத்தத்தின் விளைவு எப்படி இருக்கும் என்ற யதார்த்தத்தை முன்கூட்டியே கூறி அனைத்துத் தரப்பினரையும் எச்சரித்தவர் ஆனந்தசங்கரி. ஆனாலும் அவரது ஆலோசனைகளை தமிழ்க் கட்சிகளோ ஆயுத இயக்கங்களோ கவனத்தில் கொள்ளவில்லை. அதன் விளைவை நாடு அனுபவிக்க வேண்டியிருந்தது.

இன்றும் கூட தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் அவர். தனது சொந்தக் காணியையே தனது பிரதேச மக்களுக்காக இலவசமாகப் பகிர்ந்தளித்தவர் அவர்.

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் சமரசம் அகிம்சை ஊக்குவிப்போருக்கான மதன்ஜித் சிங் பரிசை (UNESCOMadanjeet Singh Prize for the Promotion of Tolerance and NonViolence) ஆனந்தசங்கரிக்கு வழங்கி கௌரவித்தது. இலங்கையின் இனப்பிரச்சினையானது நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்றும், இந்திய 'மொடல்' பின்பற்றப்பட்டு இலங்கையில் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றும் தொடர்ந்தும் வலியுறுத்தி வருபவர் ஆனந்தசங்கரி ஆவார். இனரீதியான முரண்பாடுகள் இன்றி ஐக்கியம் நிலைக்க வேண்டுமானால் இந்தியாவின் முறைமை சிறப்பானது என்பதுதான் அவரது கொள்கையாகும்.

**'வாழ்த்துவோம், மதிப்பளித்து மகிழ்வோம்' என்னும் தலைப்பிலான நிகழ்வு கிளிநொச்சி, கனகபுரத்தில் உள்ள friends inn விடுதியில் இன்று பிற்பகல் 12.30 இற்கு நடைபெறுகின்றது. கிளிநொச்சி மாவட்ட உருவாக்கத்தின் மூலகர்த்தாவும், முன்னாள் எம்.பியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான வீ. ஆனந்தசங்கரியின் 90 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு அவரைக் கௌரவிக்கும் பொருட்டு அங்கு மதிய விருந்துபசாரமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இலங்கைத் தமிழர் அரசியலில் மதிப்பும் முன்னுதாரணமும் மிக்க சிரேஷ்ட அரசியல்வாதியான வீ. ஆனந்தசங்கரிக்கு அரசியல்வாதிகள் உட்பட பலதரப்பினரும் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.



திருமதி பவதாரணி இராஜசிங்கம்...

# மனிதநேயன் அலவியின் நாமம் மக்களது உள்ளத்தில் என்றுமே நிலைத்திருக்கும்

## இன்று ஏழாம் வருட நினைவுதினம்

இலங்கை அரசியல் வரலாற்றிலும், முஸ்லிம்களின் சன்மார்க்க அரசியல் சமூகப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்து பணியாற்றிய அஷ்ஸெய்யத் அலவி மௌலானா 2016 ஜுன் 15 ஆம் திகதி தனது 84 ஆம் வயதில் காலமானார். எப்போதும் வெள்ளை உடையுடன் காட்சி தரும் அவர், உள்ளத்திலும் வெண்மையானவர்.



மர்ஹூம் அலவி மௌலானா, கண்டியைச் சேர்ந்த செய்யத் அஹமத் மௌலானாவுக்கும் வெலிகம சித்தி ரஹ்மானியா தம்பதிக்கும் புதல்வராக 1932 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதலாம் திகதி தெஹிவளையில் பிறந்தார். அப்போது ஆண்களுக்கான ஆங்கிலக் கல்லூரியாகத் திகழ்ந்த இப்போதைய ஹமீத் அல் ஹுசைனியாவில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த அலவி மௌலானா, சென். செபஸ்தியன், சென். பீட்டர்ஸ் ஆகிய கல்லூரிகளிலும் கற்றுள்ளார். பாடசாலைப் பருவத்திலிருந்தே பல்வேறு அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தார்.

இலங்கையில் இடதுசாரித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய பீட்டர் கெனமனுடன் இணைந்து 1947_ 1956 காலப்பகுதியில் செயல்பட்டுள்ளார். 21 வயதாக இருக்கும்போது 1953ஆம் ஆண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டதுடன், அக்கட்சியின் தொழிற்சங்கத்தையும் ஸ்தாபித்தார். 1996 ஆம் ஆண்டு அதன் தலைமைப் பொறுப்பும் அவரை வந்தடைந்தது.

தொழிற்சங்கத் துறையில் பல தசாப்தங்களாக செயற்பட்டமைக்காக தேசிய, சர்வதேச விருதுகள் அவருக்குக் கிடைத்தன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அலவி மௌலானாவின் 45 வருடங்களுக்கு மேலான தொழிற்சங்க ஈடுபாட்டை கௌரவித்து தேசிய விருதுகளை வழங்கியிருந்தார்.

உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினர் என்ற வகையில், சர்வதேச விருதுகள் பலவும் அலவி மௌலானாவுக்கு கிடைத்துள்ளன. உலகநாடுகளின் தொழிற்சங்கம் சார்ந்த நிகழ்வுகளுக்கெல்லாம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா பங்கெடுத்திருந்தார். சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான மூன்று வருட தவணை அடிப்படையில் தலைவராக 2001 ஆம் ஆண்டு அலவி மௌலானா தெரிவு செய்யப்பட்டிருந்தார். 1953 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உறுப்புரிமை பெற்றார். தான் மரணிக்கும் வரையான 63 வருட கால அரசியலில் பட்டம், பதவி, சுயநலனுக்காக கட்சி தாவாது ஒரே கட்சியில் நின்று பணியாற்றியமை அரசியல்வாதிகள் அனைவருக்கும் முன்மாதிரியாகும்.

இருபத்து நான்கு மணி நேரமும் இவருடன் தொடர்பு கொள்ளக்கூடியதாக தொலைபேசி தயாராகவிருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பல்வேறு பதவிகள் வகித்து அதன் உபதலைவர்களில் ஒருவராக இருந்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுவேலைநிறுத்தத்திற்கு தலைமை தாங்கினார். அதனால் தாக்குதலுக்கு இலக்கானார். சிறைவாசம் அனுபவிக்கவும் நேரிட்டது. தொழிற்சங்கப் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்த இவருக்கு தொழிற்சங்க சம்மேளன தலைமைப் பதவியும் கிடைத்தது. தொடர்ந்து இருபது வருடங்கள் கூட்டு மேதின தலைவராகவும் அமைப்பாளராகவும் இருந்து பணியாற்றியிருக்கிறார். சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சியின்போது 1994 இல் நியமன எம்.பியாக்கப்பட்டு ஊடகத்துறை பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டு தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக நியமனம் பெற்றார். 2002ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவினால் மேல்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

தாய்நாட்டுக்காகவும்,மக்களுக்காகவும் பணியாற்றிய அவர் என்றும் மக்கள் உள்ளத்தில் நிலைத்திருப்பார்.

பீ.எம். முக்தார்...
(பேருவளை விஷேட நிருபர்)

# தமிழக ஆன்மீக அருளுரையாளர் ரமா சுப்பிரமணியன் பங்கேற்கும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ வராதராஜ விநாயகர் சாயிநாதனின் சரணாலயத்தில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள திருமதி ரமா சுப்பிரமணியன் அவர்கள் இன்று உரையாற்றவுள்ளார். இன்று பிற்பகல் 4 மணிக்கு பிரதோஷ காலத்தில் பாபாவுக்கு விசேட உருத்திராட்ச அபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து 'ஸ்ரீ தத்தாத்ரேய அவதார நோக்கம் மற்றும் ஸ்ரீ தத்தரின் அவதாரங்கள்' பற்றி திருமதி ரமா சுப்ரமணியன் ஆன்மீக உரை ஆற்றுவார். ஷீரடி பாபாவுக்கு பக்தர்கள் தத்தம் கரங்களாலேயே அர்ப்பணிக்கும் பால் அபிஷேகம், பஜனை, அஷ்டோத்திரம், அர்ச்சனை மற்றும் மாலை ஆரத்தி ஆகியனவும் நடைபெறவுள்ளன.



எதிர்வரும் 17.06.2023 சனிக்கிழமை மாலை, சாயி பக்தை திருமதி ரமா சுப்ரமணியன் 'தத்த அவதாரி ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் பக்தி மார்க்க பாதை, அவரது யோக ஆற்றல் மற்றும் அவர் நிகழ்த்திய அற்புதங்கள்' பற்றி ஆன்மீக உரை ஆற்றுவார். ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணத்தோடு ஷீரடி சாயியின் மாலை ஆரத்தி இனிதே நடைபெறும்.

18.06.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை ஷீரடி சாயி பக்தை ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மியின் விசேட பஜனையும், 'ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் பிறப்பு, வாழ்க்கை முறை மற்றும் சமாதி நிகழ்வு' பற்றி திருமதி ரமா அவர்களின் ஆன்மீக உரையும் நடைபெறும். அன்று



மாலை 4 மணிக்கு திருமதி. ரமா சுப்பிரமணியன் எழுதி, கொட்டாஞ்சேனை ஸ்ரீ வராதராஜ விநாயகர் சாயிநாதனின் சரணாலயம் வெளியிட்டிருக்கும் 'ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி' (தேம்பே) ஸ்வாமிகளின் 'குரு சரித்திர புத்தகம்' வெளியீட்டுவிழா நடைபெறும். கொட்டாஞ்சேனை, அவிசாவளை சாயிநாதரின் சரணாலயத்தின் அறங்காவலர் ஈஸ்வரன் தெய்வநாயகம் (கணேஷ்) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், 'ஈஸ்வரனின் கனவு உதயம்' என்ற தலைப்பில் தலைமை உரையை அவர் நிகழ்த்துவார். இந்த புனித நூலை தொழிலதிபர் தெ. சண்முகசுந்தரம் வெளியிட, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய அறங்காவலர் தெ. பிரம்மநாயகம் பெற்றுக் கொள்வார். தொடர்ந்து அறநெறிபாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். வெளியீட்டு விழா நிறைவில் பாபாவின் ஆசியுடன் உருத்திராட்சமும் அன்னதானமும் வழங்கப்படும்.

இந்நூல் 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும். இவ்விற்பனையில் கிடைக்கும் நிதிஉதவி அனைத்தும் தற்போது அவிசாவளையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சாயி ஆலய திருப்பணிகளுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எச்.எச்.விக்ரமசிங்க...

# பதுளையில் ஊவா, கிழக்கு ஆளுநர்களிடையே சந்திப்பு





ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இடையில் நேற்றுமுன்தினம் (13) சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத்திற்கும், ஊவா மாகாணத்திற்கும் இடையிலான சுற்றுலா, கைத்தொழில், கல்வி ஆகிய இருதரப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருமாறு ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில், பிரதம செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கு செந்தில் தொண்டமான் இதன்போது அழைப்பு விடுத்துள்ளார்.

## மலைச்சாரல்

# புதிய சப்ரகமுவ மாகாண ஆளுநருக்கு சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நவீன் திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதியின் தொழிற்சங்க தீர்மானங்கள் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நவீன் திஸாநாயக்க ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவர் என்பதுடன் அமைச்சர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்தவருமாவார். ஜனாதிபதியின் அனைத்து தீர்மானங்களுக்கும் கடந்த காலத்தில் பக்கபலமாக செயற்பட்டவருமாவார்.



சப்ரகமுவ மாகாண ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியானதொரு விடயமாகவுள்ளதுடன் அவருடன் இணைந்து இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை செய்யவும் எதிர்பார்த்துள்ளேன்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் பற்றிய தெளிவான பார்வையை கொண்டுள்ள நவீன் திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண மக்களை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு பக்கபலமாக இருப்பார். சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்திக்காக அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக உறுதியளித்துள்ளார். அவரது அனைத்து திட்டங்களுக்கும் முழுமையான ஆதரவை இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் என்ற வகையில் வழங்க தயாராகவுள்ளேன் என்றார்.



கண்டி வத்தேகம ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா உற்சவம் இவ்வருடமும் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதன்போது இடம்பெற்ற பஞ்ச ரத பவனியில் மக்கள் பலரும் பக்தியுடன் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம் புசல்லாவை தினகரன் நிருபர்)

# மத்திய மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இனிமேல் புதிய கட்டுப்பாடு

## பாடசாலையில் தமது வகுப்பில் கற்கும் மாணவருக்கு, வெளியே ரியூஷன் வகுப்பில் கற்பிக்க அனுமதியில்லை

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாண அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வெ ளியில் தமது பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்துவதை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது பாடசாலை மாணவர்களுக்கு பணம் அறவிட்டு மேலதிக வகுப்புக்கள் நடத்துவதை தடை செய்வது தொடர்பான சுற்றறிக்கை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

2023.06.08 ஆம் திகதி PDE/2023/01 என்ற இலக்கம் கொண்ட சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இலவசமாக மாணவர்களுக்கு மேலதிக நேரங்களில் கற்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெளிநாட்டில் தொழில் பெற்று தருவதாக கூறி மோசடி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தருவதாக கூறி பெருமளவு பணத்தை மோசடி செய்த தம்பதியினர் நம்புக்கன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் தொடர்பில் நம்புக்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு முறைப்பாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக இதுவரை 820000 ரூபா பணத்தை பெற்று மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவர்களிடம் மேற்கொள்ளப்பட்டுள்ள மேலதிக விசாரணைகளின் போது நாடளாவிய ரீதியில் இதுவரை 46 பேரை இவர்கள் ஏமாற்றி மோசடி செய்துள்ளதாக தெரியவருகின்றது. இதுதொடர்பான முறைப்பாடுகளை அவர்கள் வசிக்கின்ற பிரதேச பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

## இறக்குவானை சூரியகந்த பாதை

# இரும்பு கம்பி கண்ணை தாக்கியதால் பலத்த காயமுற்ற புனரமைப்பு ஊழியர்

**இறக்குவானை விசேட நிருபர்**

பாதை புனர்நிர்மாண பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் தவறுதலாக இரும்பு கம்பி பட்டமையால் பலத்த காயங்களுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரின் கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இறக்குவானை சூரியகந்த பாதை புனர்நிர்மாண பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் மதில் சுவர் அமைப்பதற்காக கொங்கிறீட் கம்பிகளை வெட்டிக் கொண்டிருந்த போது இரும்பு கம்பி கண்ணில் பட்டு கடும் காயம் ஏற்பட்டமையால் அங்கிருந்து அவர் அவசரமாக காவத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்கு இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் நிர்மாண வேலைகளின் போது பாதுகாப்பு அங்கிகள் அணிந்திருக்கவில்லை யென தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணில் ஏற்பட்ட பலத்த காயத்தால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மண்சரிவு அச்சுறுத்தலுக்குள்ளான

# தெஹியோவிட்ட த.ம.வித்தியாலய கட்டட நிர்மாண பணிகளை துரிதப்படுத்துமாறு கோரிக்கை

மண்சரிவு அச்சுறுத்தலுக்குள்ளான கேகாலை தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தின் கட்டட நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக கேகாலை தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம், 16ஆம் திகதிகளில் மண்சரிவு ஏற்பட்டு தற்காலிகமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதன்பின்னர் மூன்று மாதங்களாக தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற 625 மாணவர்களும் அப்பாடசாலையில் கல்வி கற்க முடியாத நிலையில் பகுதிநேர வகுப்பாக தெஹியோவிட்ட சிங்கள தேசிய பாடசாலையில் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதன்பின்னர் 2017 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆண்டுகளில் ஏற்பட்ட சிறிய சிறிய மண் சரிவுகள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டன.



மீண்டும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 திகதி மற்றும் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதிகளில் ஏற்பட்ட மண்சரிவினாலும் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டு மண்சரிவுக்கு பின்னர் அப்பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டது. 2017 ஆம் ஆண்டு தற்போதைய பாடசாலையிலிருந்து, சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு ஏக்கர் காணி வழங்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைதொடர்ந்து ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் கட்டுமானப் பணிகள் இடைநடுவே கைவிடப்பட்டிருந்தது. பாடசாலை சமூகம் ஏற்படுத்திய ஆர்ப்பாட்டங்கள் காரணமாக கட்டுமானப் பணிகள் ஆரம்பித்த போதிலும் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருவதாக பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# இராமர் கோவில் மீது மரம் வீழ்ந்து விபத்து

**அக்குறணை குறூப், மஸ்கெலிய தினகரன் நிருபர்கள்**

புசல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பொட தோட்ட கீழ்பிரிவில் ஸ்ரீ இராமர் கோவிலின் மீது பாரிய ஆலமரமொன்று முறிந்து வீழ்ந்தமையால் அங்குள்ள பொருட்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கோவிலுக்கும் அதிலுள்ள பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இவ்வனர்த்தமானது இரவு வேளை நடைபெற்றமையால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லையென தெரியவருகின்றது. இவ்வனர்த்தம் தொடர்பில் தோட்ட நிர்வாகம் பிரதேச செயலகம் மற்றும் புசல்லாவை பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு அறிவித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.



## ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில்

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களை சேவையில் இணைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில் இடமாற்றம் பெற்று சென்ற ஆசிரியர்களை மீண்டும் அதே கல்லூரிக்கு நியமிக்க வேண்டுமெனக் கோரி நேற்று காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை (14/06) ஹற்றன், ஹைலன்ஸ் கல்லூரி முன்றலில் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள், பெற்றோர் இணைந்தே ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பாடசாலையில் முறையே 23, 15, 9 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையிலிருந்த மூன்று ஆசிரியர்கள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு பதிலாக மூவர் ஹற்றன் கல்வி வலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களை மீண்டும் இணைக்குமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உயர்தரப்பரீட்சை இடம்பெறவுள்ள நிலையில், இடமாற்றம் வழங்கியமை மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாதிக்கும் எனவும் அவர்களை மீண்டும் கல்லூரியில் நியமிக்க வேண்டும் எனவும் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# குளவித் தாக்குதலினால் ஐந்து பெண்கள் பாதிப்பு

**மஸ்கெலியா தினகரன் நிருபர்**

குளவிக் கொட்டினால் மஸ்கெலிய புரவுன்ஷீக் தோட்டத்தில் ஐந்து பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு சொந்தமான மஸ்கெலியா புரவுன்ஷீக் தோட்ட கெஸ்கீபன் பிரிவில் பெண் தொழிலாளர்கள் ஐவர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருக்கும் போது இவர்கள் கடுமையான குளவிக் கொட்டுக்கு இலக்காகி மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.



இச்சம்பவம் இடம்பெற்று நான்கு நாட்கள் முடிவுற்ற போதும் தோட்ட நிர்வாகம் எந்த விதமான உதவிகளையும் செய்யவில்லை என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மிக வேதனையுடன் கூறுகின்றனர்.

பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக ஞாயிறு விடுமுறை தினங்களில் பணிக்கு சென்று பணம் உழைக்கும் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகம் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஜனரஞ்சகப் பாடகர் கலைக்கமலின் 'கீத்ராத் 58' பாட்டும் பாராட்டும் (2)

*சக்தி தொலைக்காட்சி தினகரன் தினகரன் வார மஞ்சரி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் கீத்ராத் 58 பாட்டும் பாராட்டும் (2) மாபெரும் இசை நிகழ்ச்சி இம்மாதம் 18 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு07 ஜே.ஆர். ஜயவர்தன மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முன்னிலையில் தினகரன் தினகரன் வாரமஞ்சரி பிரதம் ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான 'சமூகதீபம்' டாக்டர் எம்.சி.பஹார்தீன் (M.C. Bahardeen) ஆற்றி வரும் சேவைக்காக கௌரவிக்கப்படவுள்ளார்.*

*கௌரவ அதிதிகளாக ' இறைஞானக்கவி' ரமீஸ் ஹாஜி, விசாரத ஏ.மகேந்திரன் மாஸ்டர், 'இலக்கியச் செம்மல்'; ரஷீத் எம். இம்தியாஸ், எலைட் தலைவர் இப்திகார் அஹ்மட், பிரபல பாடகி நூர்ஜகான் மர்சூக், முன்னாள் அல்ஹிதாயா கல்லூரி அதிபர் நாகூர் உம்மா காதர், சிரேஷ்ட ஊடகவியலாளர் நூருல் அயின் நஜ்முல் ஹிசைன், பிரபல சமூக சேவகி சம்சுன் மஸாஹிரா பாத்திமா ஸீனியா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இலங்கையின் பிரபல இசைக் குழுவினரான விசாரத ரட்ணம் ரட்ணதுரை, செந்துரன், அயாஸ் சவாஹிர், ஜென் இவர்களுடன் பாடகிகள் மொறின் ஜெனற், அபிலாஷா சிவகுமார், ரோய் ஜெக்ஸன், உபைத் மஹ்தூம், கலைக்கமல் கானமழையைப் பொழியவுள்ளனர். நிகழ்ச்சியை கவிக்கமல் தொகுத்து வழங்குவார்.*

## கடவுச்சீட்டு இன்று முதல்...

பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். கடவுச்சீட்டு விநியோகிக்கும் ஒரு நாள் சேவைகள் வழமை போன்று இடம் பெறுவதாக தெரிவித்துள்ள அவர், ஒன்லைன் மூல விநியோகம் நடைபெற்ற போதும் அவசியமானால் எவரும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு நேரடியாக வருகை தந்து, அதற்கான விண்ணப்பத்தை ஒப்படைக்கவும் முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இப்புதிய வேலைத் திட்டத்தின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்ததன் பின்னர் மூன்று தினங்களுக்குள் கடவுச்சீட்டு கூரியர் சேவைக்கு ஒப்படைக்கப்படும். அதனையடுத்து அதனை வீட்டுக்கே பெற்றுக் கொள்ளவும் முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களமானது மக்களுக்காக சிறந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் கடவுச்சீட்டுக்காக ஒன் லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்லைன் மூலமாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர் அவர்கள்து விரல் அடையாளத்தை நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலகங்களுடன் இணைந்ததாக, செயற்படும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களுக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களின் விபரங்கள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

# அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, பொத்துவில், # அனுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம, கெகிராவை, ஹொரவபொத்தான, # பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை, அப்புத்தளை., # மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை, காத்தான்குடி, # கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம, சீதாவக்க. # காலி மாவட்டத்தில் கரந்தெனிய, அக்மீமன, நெலுவ, # கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு, கம்பஹா, மீரிகம. # ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை, திஸ்ஸமஹாராம, # யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி, பருத்தித்துறை. # களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, மத்துகம, பாணந்துறை. # கண்டி மாவட்டத்தில் கம்பளை, குண்டசாலை, பூஜாபிட்டிய. # கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ,ருவன் வெல்ல. # கிளிநொச்சி மாவட்டத்தில் கரச்சி. # குருநாகல் மாவட்டத்தில் வடமேல் மாகாண பிரதேச செயலகம், குளியாப்பிட்டி, நிக்கவரெட்டிய. # மன்னார் மாவட்டத்தில் மன்னார் மேற்கு, மாத்தளை மாவட்டத்தில் நாவுல. # மாத்தறை மாவட்டத்தில் அதுரலிய, தெவி நுவர. # மொனராகலை மாவட்டத்தில் புத்தள. # முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு. # நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுக, வலப்பனை. # பொலனறுவை மாவட்டத்தில் திம்புலாகல, எலஹெர, ஹிங்குரன்கொட # புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், சிலாபம். # இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை, குருவிட்ட, எம்பிலிப்பிட்டிய. # திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, # வவுனியா மாவட்டத்தில் வெங்கல செட்டிக்குளம் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## KKS துறைமுக புதிய...

இலங்கை சுங்கம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம் என்பன பல வசதிகளை ஏற்பாடுகள் செய்துள்ளன. சில காலம் இலங்கை கடற்படையின் கீழ் இயங்கிவந்த இந்தத் துறைமுகத்தில், யுத்தம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களை ஏற்றி இறக்குதல், களஞ்சியப் படுத்தல் போன்ற செயற்பாடுகள் மட்டுமே இடம்பெற்றன. தற்போதைய அரசாங்கத்தின் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான சுற்றுலா பயணிகளின் வருகையை மேம்படுத்தும் திட்டத்துக்கமைய, காங்கேசன்துறை சுற்றுலாத் துறைமுகமாக மாற்றப்படுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன இணைந்து வாரத்தில் ஒருமுறை இந்திய அதிசொகுசு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை நடத்தும் திட்டத்துக்கு உடன்பாடு கண்டன. இவ்வாறு நவீன மயப்படுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் 200 பயணிகளுக்கு போதுமான வசதிகளை, ஒரே நேரத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. காங்கேசன்துறைக்கு வரும் எம்.வி எம்பிரஸ் அதிசொகுசு பயணிகள் கப்பல், துறைமுகத்துக்கு வெளியில் நிறுத்தப்படும். அதிலுள்ள பயணிகள் பாதுகாப்புடன் துறைமுகத்தின் புதிய இறங்குத்துறைக்கு படகுகள் மூலம் அழைத்து வரப்படுவர். இவர்கள் தொடர்பிலான பதிவுகளும் அங்கு மேற்கொள்ளப்படும். அதிசொகுசு பயணிகள் கப்பலில் வருகை தரும் சுற்றுலா பயணிகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் வரவேற்கப்படுவர். காங்கேசன்துறைக்கு வருகை தரும் முதலாவது அதிசொகுசு பயணிகள் கப்பலின் பயணத்தை நினைவு கூரும் வகையில் அமைச்சருக்கும் கப்பலின் கப்டன் டென்னிஸ் கோரப் (Denys Corop) க்குமிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்படவுள்ளன.

நாளைய தினம் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ் எம்.சார்ள்ஸ் , யாழ்.இந்திய துணை உயர் ஸ்தானிகர் ராகேஷ் நட்ராஜ் உட்பட பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## SLPPக்கே மக்கள் ஆணை உள்ளது...

மக்கள் ஆணையை பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம். மக்கள் ஆணையைக் காட்டிக் கொடுக்கும் வகையில் ஒருபோதும் செயற்படமாட்டோமெனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன் அரசியலமைப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். ராஜபக்ஷக்கள் மீது திட்டமிட்ட வகையில் போலி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். ஒரு மாற்றத்தை நோக்கி ஜனாதிபதி பயணிக்கிறார். அவரின் கொள்கைத் திட்டங்களை நிறைவேற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் என்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவது பிரச்சினைக்குரியது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்துமென பல தரப்பினரும் தெரிவித்துள்ளனர். பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம்.அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உலகில் அதிகளவு எடையுள்ள...

டாக்டர்கள் உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஜூன் (01) கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரகக் கல் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட இவர்களது பெயர்கள், கின்னஸ் புத்தகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரபல சிறுநீரக மருத்துவர் லெப்டினன் கேணல் கே.சுதர்சனின் தலைமையிலான மருத்துவக் குழுவே, இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளது. இச்சிகிச்சையின் மூலம் 13.372 சென்றிமீற்றர் நீளமும் 801 கிராம் நிறையும் கொண்ட சிறுநீரகக்கல் பெரும் பிரயத்தனத்தின் பின்னர் அகற்றப்பட்டது. இந்த வகையில், உலகளவில் மிகவும் பாரிய சிறுநீரகக்கல்லை சத்திரசிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றிய பெருமை எமது நாட்டின் மருத்துவர்களைச் சாரும் என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

கின்னஸ் சாதனைப் பதிவின்படி உலகில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள சிறுநீரகக்கல் 13 சென்றிமீற்றருடன் 620 கிராம்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அது 2004ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள மருத்துவமனையில்

சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாரிஸ் உலகத் தலைவர்கள்...

ஜனாதிபதி எமானுவெல் மெக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார். இந்த உயர்மட்ட மாநாடு 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெறவுள்ளது. இதற்கிணங்க உலகத் தலைவர்கள் மாநாட்டின் உயர் மட்ட பேச்சுவார்த்தையில், இந்த சிறப்புரையை நிகழ்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் (17) இல், ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு செல்லவுள்ளார். ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் போது அங்கு 'பரிஸ் கிளப்' உறுப்பினர்களுடன் விசேட சந்திப்புக்கும் ஏற்பாடாகியுள்ளது. இலங்கையின் கடன் நெருக்கடியை நிவர்த்தி செய்தல் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவதாக 'பெரிஸ் கிளப்' ஏற்கனவே அறிவித்திருந்தது. அதேவேளை, இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவ்விஜயத்தில் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சிறுவர் மத்தியில் டெங்கு...

நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைவதாக தெரியவில்லை. சிறுவர் வைத்தியசாலைக்கு நாளாந்தம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.இங்கு, 35 சிறுவர்கள் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஏழு பேர் தீவிர நோய்த் தாக்கத்துடன் காணப்படுகின்றனர். எவ்வாறெனினும் இந்நோய் பாதிப்பு விரைவில் நீங்கும் என நம்பிக்கை கொள்ள முடியாது. சீரற்ற காலநிலை காரணமாக அது மேலும் அதிகரிக்கவே செய்யும். இதனால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். வீடுகள் மற்றும் பாடசாலை சுற்றாடல்களில் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக அவசியமாகும். டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த முடியாது போனால் வரலாற்றில் அதிக டெங்கு நோயாளர்கள் உருவாகியுள்ள வருடமாக இந்த வருடம் பதியப்படும். அந்த நிலையை தவிர்த்துக் கொள்ள அனைவரும் அவதானத்துடன் செயற்படவேண்டும். இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 43,346 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார அமைச்சர் டெங்கு நோய்ப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள்...

ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி 5,500 பேரையும் இணைத்துக்கொள்ளும் போது, 35 வயதுக்கு மேற்படாத பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கல்வியமைச்சில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், பௌதீக மற்றும் மனித வளங்களை பூரணப்படுத்துவதால் மாத்திரம் கல்வித் துறையை மேம்படுத்தமுடியாது. மாணவர்களின் வினைத்திறன் மிகவும் அவசியமாகும். அதேபோன்று சமூகத்தில் தற்போது நிலவும் போதைவஸ்து போன்ற தீய செயற்பாடுகள் மற்றும் முறையற்ற விதத்தில் நடந்துகொள்ளுதல் ஆகியவற்றை பாடசாலைகளுக்குள் பிரவேசிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. அதேபோன்று புதிய தலைமுறையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒழுக்கங்களுக்கு மாறான செயற்பாடுகள் குறிப்பாக பிரிவேன் போன்ற கல்வி நடவடிக்கைகளின் போது, இதுதொடர்பில் மிகவும் அவதானம் செலுத்தவேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் பாடசாலை நிர்வாகத்தில் அதிபர் சுயாதீனமாக செயற்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். பாடசாலை அபிவிருத்தி சங்கமோ அல்லது பழைய மாணவர் சங்கமோ தேவையற்ற விதத்தில் அந்த விடயங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல. இதனை, தாம், ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கியதில்

பட்டுள்ளார். நேற்று புதன்கிழமை (14) பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ரொக்கிசைட்டே மற்றும் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானபிரகாசம் கோடிசன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். அமிர்தகழி பாடசாலை வீதியிலுள்ள மேல்மாடி வீட்டின் ஒருபகுதியில் நேற்றுக் காலையில் 03 தச்சுத் தொழிலாளர்கள் கூரையில் திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது பகல் 11 மணியளவில் கூரையிலிருந்த தகரம் கழன்று வீதியிலிருந்து வீட்டுக்கு வரும் மின்சார வயரை வெட்டியதையடுத்து தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியுள்ளது. இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது டன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதேவேளை உயிரிழந்த இருவரையும் முச்சக்கரவண்டி ஒன்றில் வீட்டின் உரிமையாளர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்ததாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஆளுநர் செந்திலின்...

செயலக கேட்போர் கூடத்தில் இது நடந்தது. இதன்போது அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள மக்கள் கலந்து கொண்டு தமது குறைகளை முன்வைத்தனர். கல்வி, கலாசாரம், விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள், காணிப் பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தங்கள் குறைகளை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இங்கு, உடன் தீர்த்து வைக்கப்படக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டதுடன் காலம் தாழ்த்தி தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாக ஏனைய அதிகாரிகளின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டுவந்தார். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியியற் கல்லூரிகளில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்து நியமனத்தை எதிர்பார்க்கும் பயிற்சி ஆசிரியர்களுக்க், அம்பாறை மாவட் டத்திலுள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு இதைக் கொண்டு வருவதாக ஆளுநர் உறுதியளித்தார்.

இந்நடமாடு சேவையில் கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மாவட்ட திணைக்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Stock market gains further momentum...S&P SL 20 Index records highest daily gain in 4 months

Daily Market Watch
14th June 2023

### Market Commentary

As predicted in our previous commentaries, the stock market gained further momentum with the All Share Price Index rising by 1.62% to close at 9,216.49 yesterday. The S&P SL 20 Index rose by 2.53% to end at 2,634.81, reporting its largest daily gain in 4 months, while turnover reached LKR 2,710mn, recording its highest level in two and half months. Largest trades for the day were reported by LB Finance and LOLC Finance which accounted for 14% and 9% respectively of the total turnover. With the recent upward move in the stock market, we believe that there is no more force selling in the market.

Meanwhile, treasury bill rates continued to decline at yesterday's treasury bill auction with the 3 months T-bill rate shedding 5bps, while the 6 months and 12 months rates declined by 129bps and 102bps. With the commencement of a monetary easing phase by the Central Bank, we expect further policy rate cuts and a continuous decline in interest rates, thereby providing a strong boost to the stock market.

### T Bill Auction Summary

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

### Market Performance

| | 14.06.2023 | 13.06.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,216.5 | 9,069.6 | 1.62 |
| S&P SL 20 Index | 2,634.8 | 2,569.7 | 2.53 |
| Turnover (LKR mn) | 2,709.6 | 1,591.8 | 70.2 |
| Foreign Purchases (LKR mn) | 302.9 | 20.6 | 1370.7 |
| Foreign Sales (LKR mn) | 492.8 | 199.2 | 147.4 |
| Market Cap (LKR bn) | 3,876.1 | 3,816.3 | 1.6 |
| Market Cap (US$ bn) | 12.8 | 12.6 | 1.6 |
| Traded Companies | 247 | 245 | 0.8 |
| Market PER (x) | 5.0 | 4.9 | 1.6 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 2.2 |
| Dividend Yield (%) | 4.1 | 4.1 | -1.5 |

### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI




### Turnover Breakdown




### Key Rates

| | 14.06.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.73% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.84% |
| Treasury Bill Rate (364 Days) | 18.08% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 25.20% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Ceylon Beverage Holdings PLC (BREW) - LKR 28.84. XD date - 22.06.2023.
Lanka IOC PLC (LIOC) - LKR 4.00. XD date - 30.06.2023.
Aitken Spence PLC (SPEN) - LKR 4.00. XD date - 04.07.2023.
Royal Ceramics Lanka PLC (RCL) - LKR 0.50. XD date - 04.07.2023.
LB Finance PLC (LFIN) - LKR 3.00. XD date - 04.07.2023.
Central Finance Company PLC (CFIN) - LKR 1.75. XD date - 04.07.2023.
Swisstek (Ceylon) PLC (PARQ) - LKR 0.20. XD date - 04.07.2023.
Lanka Tiles PLC (TILE) - LKR 1.10. XD date - 24.07.2023.
Lanka Walltile PLC (LWL) - LKR 0.90. XD date - 04.07.2023.
C I C Holdings PLC (HHL) - LKR 2.50. XD date - 04.07.2023.
Sunshine Holdings PLC (SUN) - LKR 1.15. XD date - 26.06.2023.
Central Industries PLC (CIND) - LKR 3.00. XD date - 30.06.2023.
Hemas Holdings PLC (HHL) - LKR 1.95. XD date - 04.07.2023.
Hayleys Fabric PLC (MGT) - LKR 0.10. XD date - 26.06.2023.
Kelani Valley Plantations PLC (KVAL)- LKR 1.50. XD date - 27.06.2023.
Dipped Product PLC (DIPD) - LKR 0.50. XD date - 28.06.2023.
Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date - 30.06.2023.
Keells Food Products PLC (KFP) - LKR 0.50. XD date - 30.06.2023.
PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# ஆனந்தசங்கரிக்கு இன்று 90ஆவது பிறந்ததினம்

## சஜித், வாசுதேவ, டலஸ் வாழ்த்து தெரிவிப்பு



*தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி இன்று (15) தனது 90ஆவது பிறந்ததினத்தை கொண்டாடுகிறார். 1933ஆம் ஆண்டு ஜூன் 15 இல், வீ.ஆனந்தசங்கரி பிறந்தார்.*

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, டலஸ் அழகப்பெரும ஆகியோர் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.*

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:*

*தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தனது வாழ்நாளில் இனவாதத்துக்கு எதிராக போராடியவர். அவரது சகிப்புத்தன்மை மற்றும் வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மதிப்பளித்து UNESCOMadanjeet Singh Prize எனும் விருதை UNESCO கடந்த 2006ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்ததை நினைவுகூர்வதாக அவர், தெரிவித்தார்.*

***டலஸ் அழகப்பெரும எம்.பி.***

*சிறந்த மனிதாபிமானத்தை அடைவதும் அம்மனிதாபிமானத்தை தொடர்ந்து 90 வருடங்களாக கண்ணியத்துடனும் புனிதத்துடனும் பேணிப் பாதுகாப்பதும் சாதாரண செயலன்று. இலங்கையில் அத்தகைய அற்புதம் மிக்க ஒருவரான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை வாழ்த்துவதில் பெருமைப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.*

## 11 முன்பள்ளி... (03 ஆம் பக்கத் தொடர்)

அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு முச்சக்கர வண்டிகளில் மாணவர்களை ஏற்றிச் செல்வது அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரயில் பாதையின்... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தனர். கல்நேவயிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸில் 40 பேர் பயணித்துள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## தனியார் வகுப்பு.... (03 ஆம் பக்கத் தொடர்)

அதிகளவான பணத்தை பெறவேண்டியுள்ளதாகவும் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இந்நிலைமையால் பல பெற்றோர் தமது பிள்ளைகளை தனியார் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்புவதற்கு நகைகளை அடமானம் வைக்க வேண்டிய நிலை கூட ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, அரசாங்கத்திற்கு வரி செலுத்தத் தவறிய ஆசிரியர்கள், நாடு முழுவதிலும் இருப்பதாகவும் நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## உறுதுணையாக... (03 ஆம் பக்கத் தொடர்)

உள்ள சிலர், தங்கள் உறவினர்களையே காட்டிக்கொடுப்பதாகவும் குறிப்பிட்டார். இத்தாக்குதலின் பின்னணியில் காணப்படும் உண்மையை மறைப்பவர்கள் நம்மை தவறாக வழிநடத்தலாம். எனினும், நாம் தவறான வழியில் ஒருபோதும் செல்லப் போவதில்லை. இதன் பின்னணியில் காணப்படும் உண்மையை தெய்வீக சக்திகள் விரைவில் வெளிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் தற்போது உயர் பதவிகளை வகிப்பதாகக் குறிப்பிட்ட பேராயர்,அமைச்சர்கள் தினமும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த முயற்சிப்பதுடன் உண்மையை மறைக்கவும் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

## தமிழகத்திலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

இதுவரை இலங்கைக்கு கடத்தவிருந்த பீடி இலை, பீடிக் கட்டு, மஞ்சள், கடல் அட்டை பலவிதமான போதைப் பொருட்கள் உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டு வந்தன. தற்போது இலங்கைக்கு கடத்தவிருந்த பலவிதமான ஆடைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்கால அபிவிருத்தியை... (03 ஆம் பக்கத் தொடர்)

வரலாறு தொட்டு இன்றுவரை நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பாராளுமன்றத்தின் சட்டங்கள் மற்றும் கட்டளைகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இலவசக் கல்வி, கட்டட நிர்மாணிப்பு மற்றும் மனித வளங்கள் தொடர்பிலும் சட்டங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் பாராளுமன்றத்தின் ஊடாகவே இடம்பெற்று வருகின்றன. பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினரின் கருத்துக்களைப் பெற்றுக்கொ ண்டே சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இவ்வாறான முறைமையொன்றின் கீழ் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாமலிருந்தால், இன்று நாடு எத்தகைய நிலையை அடைந்திருக்கும் என நினைத்துப்பார்க்கவே முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## நீர் விநியோகத்தை.... (03 ஆம் பக்கத் தொடர்)

தங்காலை பிரதேசத்தில் நீர் கட்டணம் செலுத்தாதோரின் நீர் இணைப்பை துண்டிக்க தங்காலை நீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர் உள்ளிட்ட ஊழியர்கள் சென்றபோதே இந்தச் சம்பவம் நடந்தது.

## இறக்காமம்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலையம் மற்றும் கம நல சேவை மத்திய நிலையத்திலும் உரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வில் நிலைய முகாமைத்துவ உதவியாளர் கே. பிரதீபன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம். ஹாரிஸ், உர மானியத்திற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.சாஜிதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 06 மாதங்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

வேண்டுகோளுக்கிணங்கவே எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆறு மாத காலங்களுக்கு மேற்படி மட்டுப்படுத்தலை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார். எதிர்பார்த்தபடி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை நிறைவடைந்ததன் பின்னர், இந்த மட்டுப்படுத்தல் தொடர்பான தீர்மானம் குறித்து மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு இந்தியாவின்...

மாதங்களில் பல்வேறு விடயங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மூன்றாம் உலக நாடுகள் எதிர்கொள்ளும் கடன் அச்சுறுத்தல் பொருளாதாரத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. இதனால், இலங்கை போன்ற நாடுகளுக்கு உரிய தருணத்தில் முழுமையான கடன் நிவாரணங்களை வழங்குவதற்கும் மேலும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## A/L 40 பாட விடைத்தாள்...

செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 37 அரசாங்க பாடசாலைகளை உபயோகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் அந்தப் பாடசாலைகளை முழுமையாக மூடுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் பாடவிதானங்கள் மற்றும் அதற்கான செயற்பாடுகள் இடம்பெறும் நகரம், பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பஸ் கட்டணங்கள்...

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளும் பொறுப்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வசமாகின்றது. இதன்படி, 12 பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது. எரிபொருள் விலை, வாகன உதிரிப்பாகங்களின் விலை குறைப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கொவிட் 19 பரவல் காலப் பகுதியில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கமைய, பயணிகளை அழைத்து செல்லும் நடைமுறை அமுல்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், அதிகரிக்கப்பட்ட 20 வீத பஸ் கட்டண அதிகரிப்பு இதுவரை குறைக்கப்படவில்லை என போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்பின்னரான காலத்தில் பஸ் கட்டணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது.





# இன்று முதல் கடவுச்சீட்டு உங்கள் வீட்டுக்கே...!

**கடவுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கும் காலம் இன்றுடன் முடிவடைகிறது**

மேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால்
2023 ஜுன் 15 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு
ஹோமாகம பிரதேச செயலகத்தில்
இந்த திறப்பு விழா நடைபெறும்.




## இன்னும் எளிதாக Online மூலமாக உங்கள் கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்வதற்கான வழிகள்...

- www.immigration.gov.lk இணையத்தளத்தினை பார்வையிடவும்.
- உங்கள் கைத்தொலைப்பேசிக்கு கிடைக்கப்பெறும் கடவுக்குறியீட்டை உள்ளிடவும்
- தொடர்புடைய அனைத்து அசல் ஆவணங்களின் Scan செய்யப்பட்ட நகல்களை உள்ளிடவும்
- அருகிலுள்ள நிலையத்திற்கு சென்று உங்கள் கைரேகை அடையாளங்களை பதிவுசெய்யவும்

கைரேகை அடையாளத்தை பெற்றுக்கொண்ட பின்னர் அவசர சேவையினூடாக 03 நாட்களுக்குள் அல்லது சாதாரண சேவையினூடாக 14 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும்.

QR குறியீட்டை Scan செய்வதன் மூலமாக அல்லது +94 112 101 500 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்

1962 Hotline

23MSS/06/321

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# கிழக்கின் குரல்



# விவசாய முன்னேற்றமே நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும்

## மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்





விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற விவசாய ரீதியிலான முன்னேற்ற செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் கலந்துரையாடல், கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை (14) இடம் பெற்றது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவால் வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றின் விவசாய முன்னேற்ற செயற்பாடுகளை நிர்வகித்து மேற்பார்வை செய்யும் பொறுப்பு கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையடுத்து, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய மீளாய்வுக் கூட்டமே நேற்று இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயத் திணைக்களங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அதனை தீர்ப்பதற்கான சாதகமான தீர்மானங்கள், உள்ளூர் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான முனைப்பான அம்சங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

குறைந்த மூலதனத்துடன் கூடிய விவசாய உற்பத்திகளை பெற்றுக்கொள்ளக்கூடிய தானியங்களை இனம் கண்டுகொள்வது சம்பந்தமாக இங்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க, மாகாண மற்றும் மாவட்ட விவசாய பணிப்பாளர்கள், மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர்கள், விவசாய அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு அதி கஷ்டப் பிரதேசங்களில் இருந்து கல்வி பயில வரும் மாணவர்கள், தாய் தந்தையர்களை இழந்தவர்கள் மற்றும் அங்கவீனர்களாக காணப்படும் 32 மாணவர்களுக்கு 'இஸ்லாமிக் ரிலீப்' நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்க முன் வந்துள்ளது. இப்பாடசாலையில் இவ்வாறான மாணவர்களின் பயணத் தேவைக்காக துவிச்சக்கர வண்டிகளை வழங்கி உதவுமாறு பாடசாலை நிருவாகத்தினர் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரிடம் வேண்டி இருந்தனர்.

இந் நிலையில் இப் பாடசாலைக்கு விஜயம் செய்த நிறுவனத்தின் செயற்குழு அதிகாரிகள் உரிய மாணவர்களை இனங்கண்டு 32 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்க முன் வந்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஹில்மி தெரிவித்தார்.

# ஏறாவூர் பிரதேசத்தின் திண்மக் கழிவு பிரச்சினையை தீர்க்குமாறு வேண்டுகோள்

## கிழக்கு ஆளுநரிடம் முன்னாள் மாகாண அமைச்சர் சுபைர்

(ஏறாவூர் சுழற்சி நிருபர் )

ஏறாவூர் நகர சபை எல்லைக்குள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகளை, முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்தி தருமாறு முன்னாள் மாகாண சுகாதார அமைச்சரும், நகர சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ். சுபைர் கிழக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் ஆளுநரின் அலுவலகத்தில் ஆளுநரை சந்தித்த போது இப்பிரச்சினை தொடர்பான அறிக்கையொன்றினை கையளித்து விரைவான தீர்வொன்றினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஏறாவூர் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வந்த நிலையில், இந்த கழிவுகளை முறையான பொறிமுறையூடாக முகாமைத்துவம் செய்வதற்கு திட்டமிட்டு தான் தவிசாளராக இருந்த போது 2023ல் அதற்கென நகரசபை நிதியிலிருந்து காணி கொள்வனவு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் இப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற திண்மக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யும் பொருட்டு இக்காணியில், திண்மக்கழிவு வேலைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகளை செய்வதோடு, இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வினைப் பெற்றுத் தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் பேசிய ஆளுநர், விரைவில் ஏறாவூருக்கு விஜயம் மேற்கொண்டு குறித்த இடத்தினை நேரில் பார்வையிடுவதாக உறுதியளித்துள்ளார்.

# பொத்துவில் பிரதேசத்தில் காணி நடமாடும் சேவை

(ஒலுவில் விசேட ,அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் பொது மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட காணி நடமாடும் சேவை செவ்வாய்கிழமை (13) பொத்துவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண காணி ஆணையாளர் றுகான் தஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந் நடமாடும் சேவையில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொத்துவில், கோமாரி, அறுகம்பே, செங்காமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்பட்ட காணிப் பிணக்குகளை குறித்த காணிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு தெரிவு செய்யப்பட்ட 15 பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட தலைமைக் காரியாலய காணி உத்தியோகத்தர் கே.எல்.எம். முஸம்மில் தெரிவித்தார்.

காணிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல், எல்லையிடல், காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், உரிமம் மாற்றம் செய்தல் போன்ற பிரச்சினைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொத்துவில், பாணமை, கோமாரி ஆகிய பிரதேசங்களில் நீண்ட காலமாக காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்படாமல் இருந்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பயனாளிகள் 50 பேருக்கு காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



காத்தான்குடியில் பேரீச்சை மரங்கள் இம்முறை ஏற்பட்டுள்ள கடுமையான வெப்பநிலை காரணமாக அதிகளவில் காய்த்துள்ளன. காத்தான்குடி பிராதான வீதியில் நடப்பட்டுள்ள அதிகளவான ஈச்சமரங்களே இவ்வாறு காய்த்து குலுங்குவதை படத்தில் காணலாம்.
(படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# சாய்ந்தமருதில் அனர்த்த முகாமைத்துவ செயலமர்வு



(கல்முனை குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வொன்று செவ்வாய்க்கிழமை (13) இடம் பெற்றது. அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் அதிதியாகக் கலந்து கொண்டார். தென்கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் ஐ.எல். ஸாஹிர் வளவாளராக கலந்து கொண்ட இந் நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ முவாப்பிகா, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் உட்பட கல்முனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், கிராம நிருவாக உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களில்

அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மனித செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பாகவும், அனர்த்த நிலைமைகளின் போது மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# செல்வராஜனுக்கு உயர் கௌரவம்



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்திய கோவிலூர் செல்வராஜனின் பொன்விழா நிகழ்வும், இலக்கியத் தென்றல் மலர் வெளியீடும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழா, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புலவர் விநாயகமூர்த்தி ரஞ்சித மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கோபால ரத்தினம் அதிதியாக கலந்து கொண்டார். விழாவில், கலைஞர், பன்முக ஆளுமையாளன், எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜன், பொன்விழா நாயகனாக கௌரவிக்கப்பட்டதோடு, அவருக்கு இலக்கியத் தென்றல் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட 14 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் வீட்டு வளாகத்தில் டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட 14 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், ஒருவருக்கு தலா 3,500 ரூபாய் வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (13) குறித்த வழக்கு நீதிமன்ற பிரதம நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, டெங்கு நுளம்பு பரவும் விதத்தில் வீட்டு வளாகத்தில் குடம்பிகள் இருந்ததாக உறுதி செய்யப்பட்டதை அடுத்து, குறித்த 14 பேருக்கும் ஒருவருக்கு 3,500 ரூபாய் வீதம் தண்டம் செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்து வந்துள்ள நிலையில், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளது. இந்நிலையில் செல்வநாயகபுரம் பகுதியில் வீடு வீடாகச் சென்று டெங்கு தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாக உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



அறுகம்பேக்கு விஜயம் செய்த சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, அறுகம்பே சஸ்டைனபில் கிலீன் லங்கா அமைப்பினரால் ஆரம்பிக்கப்பட்ட குப்பை தொட்டிகளை பார்வையிட்டார். இப் பணியை ஆரம்பித்துள்ள அமைப்பின் தலைவர் எ.முசம்மில், செயலாளர் எச்.எம். இமாம் ஆகியோர் அமைச்சருக்கு இது தொடர்பாக விளக்கமளிப்பதையும், அருகில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் நாளின் பெரேரா, சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் எ.எம்.ஜெளபர் ஆகியோரையும் காணலாம். (படம் : அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை தொடர்பான கருத்தரங்கு,வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் ஆகியோரால் பயிற்சி வழங்கப்படுவதையும் கலந்துகொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.
(படம் : நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# உணவகங்களில் சட்டவிரோத இறைச்சி

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தோல் சார்ந்த நோய்களை கருத்திற்கொண்டு, மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட இறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை மற்றும் உணவிற்காக மாடுகளை அறுக்கும் செயற்பாடு மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டிருந்தது.

எனினும் ஆங்காங்கே உணவகங்களில் மாட்டிறைச்சி பயன்படுத்தப்படுவதாக மூதூர் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், செவ்வாய்க்கிழமை (13) செயலாளரின் பணிப்பின் கீழ் மூதூர் பிரதேச சபையின் வருமானப் பரிசோதகர்கள் குழு, தோப்பூர் பிரதேசத்தில் திடீர் கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போது அடையாளப்படுத்தப்பட்ட உணவகங்களில் சட்டவிரோதமாக பெறப்பட்ட இறைச்சித் தொகுதி காணப்பட்டதுடன், குறித்த இறைச்சிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனைகளுடன் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் புதைக்கப்பட்டதோடு, குறித்த நபர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

# வடக்கின் உதயம்

# மூளைச்சாவடைபவர்களின் சிறுநீரகத்தை தானமாக வழங்குமாறு வேண்டுகோள்

**யாழ். விசேட நிருபர்**



விபத்துகளினால் திடீரென மூளைச்சாவடைந்து இறப்பவர்களின் சிறுநீரகத்தை தானமாக வழங்குவதற்கு அவர்களின் உறவினர்கள் முன்வர வேண்டுமென, யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுநீரக வைத்திய நிபுணர் எஸ். மதிவாணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விபத்துகள் மற்றும் சில நோய்களால் மூளைச்சாவடைந்து இறப்பவர்களின் இதயம் சில மணிநேரம் இயங்கிக்கொண்டிருக்கும் போது அவர்களின் சிறுநீரகத்தை, சிறுநீரகம் தேவைப்படும் ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்த முடியும். இதனால், இன்னொரு உயிரைக் காப்பாற்ற முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பாக யாழ்ப்பாண பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு உதவி செய்பவர்கள் எப்பொழுதும் நன்றிக்குரியவர்களாக இருப்பதுடன், இன்னொரு உயிரைக் காப்பாற்றிய பாக்கியத்தை பெற்றவர்களாக அவர்கள் இருப்பார்களெனவும், அவர் தெரிவித்தார்.

ஆகையினால், இது தொடர்பான விழிப்புணர்வை பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## அளவெட்டி

# அருணாசலம் பாடசாலையில் சுற்றாடல் விழிப்புணர்வு



**கோப்பாய் குறூப் நிருபர்**

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் விழிப்புணர்வு தொடர்பாக வலிகாமம் கல்வி வலய சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகரும் சுற்றாடல் முன்னோடி கோட்ட ஆணையாளருமான க.சிவகரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (13 ) நடத்தினார்.

இதன்போது, மாணவர் பேண்தகு நிலையில் சுற்றாடலைப் பேணும் உத்திகள் தொடர்பாக மாணவர்களுக்கு அவர் விளக்கமளித்தார்.

தேசிய சுற்றாடல் வாரத்துடன் இணைந்ததாக இம்மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை பாடசாலைகளில் சுற்றாடல் தின விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

# இயற்கை வளங்களை பாதுகாக்க கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கக் கோரி சூழல் பாதுகாப்புக்கான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி அம்மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை (14) நடைபெற்றது.

மன்னார் கரிட்டாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரிலுள்ள அதன் அலுவலகத்துக்கு முன்பாக கரிட்டாஸ் வாழ்வுதய இயக்குநர், அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றதுடன், இதில் இளைஞர், யுவதிகள், சூழல் பாதுகாப்புக் குழுவினர், மன்னார் கரிட்டாஸ் வாழ்வுதய பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர், மன்னார் மாவட்டச் செயலகத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணி சென்றடைந்ததுடன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல்லிடம் மகஜரை ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் கையளித்தனர்.

## அறிவித்தல்



மேற்படி புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள 840363660V எனும் தே.அ.அ. இலக்கத்தைக் கொண்ட **புளத்சிங்களகே சஞ்சய இஷார குரே** என்பவர் 2023 பெப்ரவரி 14ஆம் திகதி முதல் லொஜிசென்ட்ரிக்ஸ் (தனியார்) நிறுவனத்தில் (Logicentrix (Pvt) Ltd) களஞ்சியசாலை நிறைவேற்றுனர் பதவியில் மேற்கொண்டும் கடமையாற்றவில்லை என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**புளத்சிங்களகே சஞ்சய இஷார குரே** என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் லொஜிசென்ட்ரிக்ஸ் (தனியார்) நிறுவனம் எவ்விதத்திலும் பொறுப்பு கூறாது என அறியத்தரப்படுகின்றது.

**பணிப்பாளர் சபை,**
**லொஜிசென்ட்ரிக்ஸ் (தனியார்) நிறுவனம்,**
**இல. 260, ஸ்ரீமத் ராமநாதன் மாவத்தை,**
**கொழும்பு-15.**

(இணைப்பு - 1)

2011 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல 5 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் சொத்துக்களை செயற்பாடற்றதாகும் அறிவித்தல்.

இலக்கம் 43/29, சங்கானந்த மாவத்த, நல்லூருவ, பாணந்துறை என்ற முகவரியில் குனெத்தி தமிதூ சாமேந்ர பெரேராவின் பெயரில் உள்ள கீழ்க்காணும் சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்டவிரோத செயற்பாட்டின் மூலம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடுகளின் மூலம் பெற்ற பணத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக தெரிய வந்துள்ளதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ம் பிரிவின் பிரகாரம் 2023.06.06 முதல் ஹோமாகம உயர் நீதிமன்ற இலக்கம் HC/SPL/01/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கி உள்ளது.

01. பதிவு இலக்கம் WP, PR - 2593 Toyota வகை கெப் வாகனம் (செஸி இலக்கம் MROHR29G303003995, என்ஜின் இலக்கம். 2KD-5231147)

சொல்லப்பட்ட சொத்து சம்பந்தமாக தத்தமது உரித்துரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கின்றேன்.

**நீதிமன்றத்தில் கட்டளை பிரகாரம்,**
**பதிவாளர்,**
**ஹோமாகம உயர்நீதிமன்றம்**

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு நினைவிடத்துக்கு அடிக்கல்



யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்தும் முகமாக நூற்றாண்டு நினைவிடம் அமைக்கப் படவுள்ளதுடன், இதற்காக அத்திவாரம் இடும் நிகழ்வு அக்கலாசாலையின் அதிபர் தலைமையில் நேற்று புதன்கிழமை (14) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமான சுவர்ணா நவரத்தினம் நினைவிடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். நினைவிடம் அவரது உபயமாக அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விலைமனுக்கோரல் அறிவித்தலின் பிழைதிருத்தம்

2023.06.07 அன்று தினமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த, Dressing of Side wall Near Vishnu Dewalaya at moat of Sri Dalada Maligawa Premises' என்ற கருமத்திற்கான தகைமை பெறும் ஆகக்குறைந்த தரம் (Minimum Grade or CIDA Registration) "C-6" எனக்குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கான தகைமைபெறும் தரமானது C-5, C-6 மற்றும் C-7 எனத் திருத்தப்படுகின்றது. (Public Finance Circular No: 04/2016(iv)

விலைமனுப்படிவங்களை வழங்கும் இறுதித்தினம் 2023.07.05 பி.ப. 3.00 வரையும், விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் 2023.07.06 பி.ப. 3.00 வரையும் நீடிக்கப்படுகின்றது.

விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று மற்றும் களப், பரிசீலனையானது, 2023.06.19 அன்று மு.ப. 9.00 இற்கு தலதாமாளிகையின் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக உதவும் குறித்த அலுவலர்களுடன் களப்பரிசீலனையை மேற்கொள்ளுமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், வலயப் பெறுகைக்குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**குண்டசாலை.**

# இலங்கை தமிழரசு கட்சி வேட்பாளர் மரிய பேர்ணால்ட் காலமானார்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



சாவகச்சேரி நகர சபையின் கோவில் குடியிருப்புத் தரை வட்டார இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர் மரிய பேர்ணால்ட் காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (13) காலை இவர் காலமானதாக, இவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவரது இறுதிக் கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (19) சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பேரம்பலம் வீதியை அண்டி அமைந்துள்ள இவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதாகவும், உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் கோவில் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

8ஆம் கட்டை, அலிவங்குவ, உபுல்தெனிய என்ற முகவரியில் வசிக்கும் நாரங்வல கெதர துசித சதுரங்க நாரங்வல ஆகிய நான், 2023.05.19 அன்று வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம். உரிமம் இன்றி ஔடதங்களைக் களஞ்சியப் படுத்தல் தொடர்பான குற்றத்திற்கு ஆளானதுடன், அதற்காக ரூபா 95,000/- இற்கான தண்டப்பணத்தையும், செலுத்தினேன் என்பதனை அறிவித்துக் கொள்வதுடன், மீண்டும் இவ்வாறான குற்றங்களைச் செய்ய மாட்டேனெனவும் அறிவித்துக் கொள்கின்றேன். இதற்காக ஏற்பட்ட கஷ்டங்களிற்காக இலங்கை பொது மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

## கிரிபாவ பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு அபிவிருத்தி திட்டத்தினை ஒழுங்கமைப்பதற்கு கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்களுக்கு செய்யப்படும் அறிவித்தல்

கிரிபாவ பிரதேச சபையினால் 2024ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்டத்தினை ஒழுங்கமைத்தல் இத்தினங்களில் நடைபெறுவதுடன், குறித்த வரவு, செலவு திட்டத்தில் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டத்திற்கு உள்வாங்குவதற்கு இயலுமான வகையில் கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வாழ்கின்ற உங்களது கருத்துக்கள் இருக்குமாயின் அவற்றை எழுத்து மூலம் 2023 ஜுன் மாதம் 30ஆந் திகதிக்கு முன் நேரில் வந்து அல்லது தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் கிரிபாவ பிரதேச சபைக்கு கிடைக்கும் வகையில் 'தலைவர், பிரதேச சபை, கிரிபாவ என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்துடன் தெரிவிதுக் கொள்கின்றேன்.

**எச்.எம்.எஸ். ஹேரத்**
**செயலாளர்,**
**கிரிபாவ பிரதேச சபை,**
**தம்புத்த,**

**முகவரி - பிரதேச சபை, கிரிபாவ**
**மின் அஞ்சல் - giribawaps@gmail.com**

## விண்ணப்பத்துக்கான அறிவித்தல்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: DTS 00188/22
வெளிநாட்டு மரணசாசன தத்துவ பத்திரத்தின் மீள் இலச்சினையிடல்
மதிப்பு : ரூ.7,250,000.00

இல. 1 பலம் கறீன், சைடென்ஹாம், விக்டோரியா ஸ்டேட் அவுஸ்திரேலியாவை சேர்ந்த காலஞ்சென்ற திருமதி. சரோஜினி அமரவர்தன (தேசிய அடையாள அட்டை இல: 545353741V சரோஜனி அமரவர்தன என குறிப்பிடப் பட்ட) அவர்களது இறுதி விருப்பாவணம் சம்பந்தப்பட்டது.

**காலஞ்சென்றவர்**

குடியியல் சட்ட நடவடிக்கை கோவை இல பிரிவு 554U இன் கீழ் (குடியியல் சட்ட நடவடிக்கை கோவை 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்கத் திருத்தச் சட்டத் திற் கமைய) மேற் கொள் ளப் படும் விண்ணப்பம்

இல.1 பலம் கறீன், சைடென்ஹாம், விக்டோரியா ஸ்டேட் அவுஸ் திரேலியாவை சேர்ந்த கயான் டயஸ் அமரவர்தன தனது அட்டோனி தத்துவப் பத்திரக்காரரான கொட்டிகல் கந்தவத்த, கெக்கனதுர, மாத்தறையை சேர்ந்த டொரீன் புல்ட்ஜென்ஸ ஊடாக

**விண்ணப்பதாரர்**

காலஞ்சென்ற திருமதி. சரோஜினி அமரவர்தன அவர்களது இறுதி விருப்பாவணம் சமபந்தமாக 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அவுஸ்திரேலியா விக்டோரியா மாகாண உச்ச நீதிமன்றத்தால் இல 1 பலம் கறீன், சைடென்ஹாம், விக்டொரியா ஸ்டேட் அவுஸ்திரேலியாவை சேர்ந்த கயான் டயஸ் அமரவர்தன அவர்கட்கு வழங்கப்ப்ட்ட மரணசாசன தத்துவப் பத்திரத்தினை திருத்தப்பட்ட குடியியல் சட்ட நடவடிக்கை கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் கீழ் மீள் இலச்சினை இடுவதற்கான விண்ணப்பம். இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 28 நாட்கள் நிறைவடைந்ததும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**வானர்ஸ்**
**விண்ணப்பதாரிகள் சட்டத்தரணிகள்**
**14வது மாடி மேற்கு கோபுரம்.**
**உலக வர்த்தக மையம்**
**கொழும்பு 01**

# இலங்கை, தமிழ்நாட்டு முஸ்லிம்களின் சமூக, கல்வி மறுமலர்ச்சிக்கு பங்களித்தவர் அஸ்ஸெய்யிது யாஸீன் மௌலானா (ரஹ்)

**இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த மார்க்க அறிஞரும், சூபி மகானும், சிறந்த எழுத்தாளரும், பன்னூல் ஆசிரியரும், கவிஞரு–மான ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது யாஸீன் மௌலானா அவர்கள், இலங்கை மற்றும் தமிழ்நாட்டு முஸ்–லிம்களின் கல்வி, மெய்ஞானம் மற்றும் சமூக மறுமலர்ச்சிக்குப் பங்–காற்றிய சிறப்பிற்குரியவர்களில் ஒரு–வராகக் கருதப்படுகின்றார்.**

இலங்கையின் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்குவல்லை நகரில் வாழ்ந்த ஜமாலிய்யா ஸெய்யிது முஹம்மது மௌலானா அல் ஹாஷிமி (ரஹ்) அவர்களுக்கும் செய்யிதா உம்மு ஹபீபா அவர்களுக்கும் மகனாக கி.பி.1899 (ஹிஜ்ரி1386)இல் ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது யாஸீன் மௌலானா அவர்கள் பிறந்தார். யாஸீன் மௌலானாவின் பெற்றோர் இறைத்தூதர் நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் 32ஆவது வழித்தோன்றலிலும் அஷ்செய்கு அப்துல் காதர் ஜீலானி(ரஹ்) அவர்களின் 19ஆவது வழித்தோன்றலிலும் வந்தவராவார். அஷ்செய்கு ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது முஹம்மத் மௌலானா அல் காதிரி ஈராக் நாட்டின் பக்தாத்தைச் சேர்ந்தவர். இவர் ஈராக் இராணுவத்தில் உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர், முதலில் இந்தியாக்கும் பின்னர் இலங்கைக்கும் வந்துள்ளார். 123 வருடங்கள் வாழ்ந்த இவர்கள், கி.பி.1951 இல் மரணமடைந்ததோடு தமிழ்நாட்டின் சம்பைப்பட்டிணத்தில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

### கல்வி

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## புனர்நிர்மாண வேலைகள் – 2023

## ருஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை

1. கீழே வழங்கப்பட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவத்தின் கீழ் இலங்கை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| இல. | வேலைகள் | CIDA தரம் (கட்டிடங்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம்/ விலைமனுப் பிணை (ரூபாவில்) | பொறியியலாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | ருஹுண பல்கலைக்கழகத்தின் ரவீந்திரநாத் தாகூரின் ஞாபகார்த்த கேட்போர் கூடத்திற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்நிர்மாணம் மற்றும் குறைபாடுகள் சீராக்கல் | சி-6, சி-5 அல்லது சி-4 | 7,000.00 | 253,000.00 | 25.285 | 120 |
| 2. | மாத்தறை, வெல்லமடம, ருஹுண பல்கலைக்கழக எலியகந்தவிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான (புதிது) விடுதியின் உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்நிர்மாணம். | சி-8, சி-7 அல்லது சி-6 | 3,500.00 | 97,000.00 | 9.633 | 90 |
| 3. | மாத்தறை, வெல்லமடமவிலுள்ள ருஹுண பல்கலைக்கழக பரீட்சைகள் கிளைக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்நிர்மாண வேலைகள் | சி-8, சி-7 அல்லது சி-6 | 3,500.00 | 100,000.00 | 9.97 | 120 |
| 4. | மாத்தறை வெல்லமடமவிலுள்ள ருஹுண பல்கலைக்கழக எலியகந்த பெண்கள் (பழையது) விடுதிக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்நிர்மாணம். | சி-8, சி-7 அல்லது சி-6 | 2,500.00 | 61,000.00 | 6.052 | 90 |
| 5. | மாத்தறை வெல்லமடம ருஹுண பல்கலைக்கழக CSL-CER அலகின் இரசாயன ஆய்வுகூடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட ஆய்வுகூட மேசை, Work top மற்றும் சுவர் கப்போர்ட் | சி-9 அல்லது சி-8 | 1,000.00 | 11,000.00 | 1.050 | 90 |

3. ஒவ்வொரு விலைமனுவிற்கும் மேலே காட்டியவாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், 2023 ஜூலை 5 ஆம் திகதி வரையும் பி.ப. 2 மணி வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
4. மாத்தறை, வெல்லமடம, ருஹுண பல்கலைக்கழக பிரதான சபை அறையில் (முன்னைய மூதவை அறை) 2023 ஜூன் 28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
5. விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 5 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. மேலே குறித்துரைக்கப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் நிழற்படப்பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் மாத்தறை, வெல்லமடம, ருஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023 நவம்பர் 02 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2023 ஜூலை 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.
9. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மேலேயுள்ள மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ருஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, ருஹுண பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கமானது குறிப்பிடப்படல் வேண்டும்.
10. மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்களை மூடும் நேரத்தின் பின்னர் அனைத்து விலைமனுக்களும் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை மாத்தறை, வெல்லமடம, ருஹுண பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு (041-2033260 – நீடிப்பு – 12045) மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ருஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
2023 ஜூன் 15 ஆம் திகதியன்று.

அரச நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள (பதிவு இலக்கம் எல் 73215) எமது முகவரி **பரடைஸ் கொவிபொல, கனேபல்ல, தெலிகம (யட்டியந்தோட்டை ஊடாக) என்பதிலிருந்து இலக்கம் 31, சதுன்புர, கொட்டாவ, மத்தேகொட** என மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறவிக்கிறோம்.

**செயலாளர்**
**பரடைஸ் சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**இல. 31, சதுன்புர, கொட்டாவ, மத்தேகொட**

## For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் வசதி தொடர்பு இல:8816439

கொச்சிகடை,பல்லன்சேன வடக்கு,இல.88/2 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.மில்லாவ தந்திரிகே சுஜித் பிரியந்த அப்புஹாமி என்பவர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 09.08.2019 ஆம் திகதி 2136 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 29.07.2019 ஆம் திகதி தினமின,டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 1ஆவது ஆதனத்தை 2023.07.13 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கும் 2ஆவது ஆதனத்தை 2023.07.13 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

1. மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேசசபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு கிராமத்தில் அமைந்த “தவட்டகஹவத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். ரீ.எஸ். டீ. பெரேரா தயாரித்த 15.07.2012 திகதியிட்ட வரைபடம் இல.426 துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் ஜொசபின் சிவப்புள்ளேயின் காணியும், கிழக்கில் சித்ரா பெர்ணான்டோபுள்ளேயின் காணியும், தெற்கில் சி. சிவப்புள்ளேயின் காணியும், மேற்கில் துண்டுகள் 2 மற்றும் 1ம் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே 10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 140/05 ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் பல்லன்சேன வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு குறியீட்டு இல 76 இல் பல்லன்சேன வடக்கில் அமைந்த “மொலவத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எஸ். எஸ். பெரேரா தயாரித்த 20.12.2006 திகதியிட்ட வரைபடம் இல.5755ல் துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் துண்டு 4ம், தென்கிழக்கில் பாருதொட்ட பாதையம், தென்மேற்கில் துண்டு 6ம், வட மேற்கில் துண்டு 1 ம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே 2.15)விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E966/214 ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் கட்டான பிரதேசசபை எல்லைகளில் வெலிஹேன வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு குறியீட்டு இல 77 ல் வெலிஹேன கிராமத்தில் அமைந்த “தவட்டகஹவத்த” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். ரீ.எஸ். டீ.பெரேரா தயாரித்த 15.07.2012 திகதியிட்ட வரைபடம் இல.426 துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் ஏ.என்.ஏ. மல்லிகாவின் காணியும், ஜொசபின் சிவப்புள்ளேயின் காணியும், கிழக்கில் துண்டு 3ம் தெற்கில் துண்டு 2 ம் சி. சிவப்புள்ளேயின் காணியும், மேற்கில் பிரதேசசபை பாதையும் எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே 3.50) விஸ்தீரணமுடையது. பொது வழிப்பாதையொன்றாக உபயோகிப்பதற்கு உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் E 140/06ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

திருமதி. டப்ளியூ.கே.வீ.என். பெர்ணான்டோ
முகாமையாளர்
இலங்கை வங்கி
வைக்கால்

உரிமைப் பத்திரங்களை பரிசோதிப்பதற்கு ஏலதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதோடு முகாமையாளர்,இலங்கை வங்கி,வைக்கால் கிளை எனும் தொலைபேசி இலக்கத்தின் 031-2277280 ஊடாக மேற்குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ளவும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
**MINISTRY OF PROVINCIAL ADMINISTRATION, HOME AFFAIRS, PROVINCIAL COUNCILS & LOCAL GOVERNMENT**

# INVITATION FOR BIDS

**DATE** : **14.06.2023**
**IFB NO.** : **LGESP-AF-UVA-25**
**Loan No. and Title** : **L3431, Local Government Enhancement Sector Project (Additional Financing)**
**Contract Numbers and Titles:**

| No. | Contract No. | Contract Name |
|---|---|---|
| Civil Works | | |
| 1 | UVA-AF-PAS-13A | Laying of uPVC pipes in distribution network of Passara town area (Section I) at Passara Water Supply Scheme |
| 2 | UVA-AF-PAS-13B | Laying of uPVC pipes in distribution network of Passara town area (Section II) at Passara Water Supply Scheme |
| 3 | UVA-AF-PAS-21A | Laying DI (150mm dia, PN25) Pipes in Hopton estate (Ch. 11+410 to 13+100) at Passara Water Supply Scheme |
| 4 | UVA-AF-PAS-21B | Laying DI (100mm dia, PN25) along Passara-Lunugala Road (Ch. 9+700 to 11+410) at Passara Water Supply Scheme |
| 5 | UVA-AF-PAS-21C | Laying HDPE (110mm dia, PN25) Pipes along Passara-Lunugala Road (Ch. 6+000 to 7+850 & 8+850 to 9+700) at Passara Water Supply Scheme |
| 6 | UVA-AF-PAS-21D | Laying HDPE (110mm dia, PN16) Pipes along Passara-Lunugala Road (Ch.4+700 to 6+000 & 7+850 to 8+850) at Passara Water Supply Scheme |
| 7 | UVA-AF-PAS-21E | Laying HDPE (110mm dia, PN16) Pipes along Passara-Lunugala Road (Ch. 0+000 to 4+700) at Passara Water Supply Scheme |
| Electro Mechanical Works | | |
| 1 | UVA-AF-PAS-10 | Supplying accessories and Installation of Sludge/Recovery Pump with accessories at Passara Water Treatment Plant |
| 2 | UVA-AF-PAS-11 | Supplying accessories and Installation of Backwash Pump with accessories at Passara Water Treatment Plant |
| 3 | UVA-AF-WS-CKD-19C-8 | Supplying & fixing of DI pipes, Fittings, Valves, Supports etc for Vertical Turbine Pump at Girandurkotte Water Supply Scheme |
| 4 | UVA-AF-WS-CKD-19C-15 | Supplying accessories and Installation of Sludge Pump with accessories at Girandurukotte Water Supply Scheme |
| 5 | UVA-AF-WS-CKD-19C-16 | Supplying accessories and installation of Alum Dosing Package, Air Blower with accessories at Girandurukotte Water Treatment Plant |
| 6 | UVA-AF-WS-CKD-19C-19 | Supply & installation of S/S Penstocks at new Rapid Sand Filter of Girandurukotte Water Treatment Plant |
| 7 | UVA-AF-WS-CKD-19C-20 | Supply & Installation of S/S Penstocks (05 Nos) and S/S Ladders at Ulhitiya Intake at Girandurukotte Water Supply Scheme |
| Supply Contracts (Electro Mechanical Works) | | |
| 1 | UVA-AF-WS-CKD-19C-5 | Supplying of Motor Operated Valves (10 Nos.) for Girandurukotte Water Supply Scheme |

**Deadline for Bid Submission: 30-06-2023**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the Asian Development Bank (ADB) towards the cost of Local Government Enhancement Sector Project - Additional Financing (LGESP-AF) and intends to apply part of the loan funds to cover eligible payments under the above-mentioned Contracts.
2. The Chief Secretary of Uva Provincial Council (Chairman, Provincial Procurement Committee) invites sealed bids from eligible bidders for the works mentioned above.
3. National Competitive Bidding/Shopping Procedure will be conducted in accordance with ADB's Single-Stage: One-Envelope bidding procedure (NCB/1S1E)/Shopping Procedure and is open to all bidders in Sri Lanka as described in the bidding document which comprises the following documents:
   i. Request for Quotations
   ii. Form of Quotations
   iii. Form of Contract
   iv. Terms & Conditions
4. Only eligible bidders with the following key qualifications should participate in this bidding:
   (a) National Bidders shall have qualifications as follows;
      i. For Civil Works Contracts, Bidders shall have CIDA registration Category C5 or C6 in water supply and sewerage
      ii. For Electro-Mechanical Contracts, Bidders shall have CIDA registration Category EM2 or EM3
   (b) Bidder's Financial Situation- Net worth should be LKR 20 million or Credit facility of LKR 10 million.
   (c) Construction Experience- Bidders should have completed at least one project similar to the proposed work, where the value of the bidder's participation exceeds LKR 15.0 million (Before VAT)
5. Interested bidders may inspect the Bidding Document free of charge and obtain further information at the office of:
   Senior Engineer,
   Sub Project Coordinating Unit (Uva),
   No. 22/23, R.H. Gunawardana Mawatha,
   Badulla.
   Telephone: +94552225201 Facsimile Number: +94 552225201
   E-Mail: lgespuvanew2@gmail.com
6. To purchase the bidding documents in English, eligible and interested bidders should:
   - Write to the address above requesting the bidding documents clearly indicating the name of package.
   - Pay a non-refundable fee of **LKR 5,000/= (Rupees Five Thousand)** in cash for the package as mentioned in paragraph 4 above, to the Senior Engineer, Sub Project Coordinating Unit (Uva) at the address mentioned in paragraph 5 above.
   - Bidding documents can be obtained between **9.00 a.m. and 3.00 p.m.** on working days from **15-06-2023 to 30-06-2023**. Bids will be opened at the office mentioned in paragraph 5 on **30-06-2023 at 15.00 hrs**
7. Pre-bid meetings will be arranged as follows:
   For Contracts under Passara Water Supply Scheme is arranged on **23-06-2023 at 10.00 hrs**
   For Contracts under Girandurukotte Water Supply Scheme is arranged on **23-06-2023 at 14.00 hrs**
   Interested bidders may attend the pre-bid meeting at their own expenses.
8. Interested bidders are requested to submit the completed bids:
   - To the office of the
     **Chief Secretary (Uva Provincial Council) – Chairman, Provincial Procurement Committee,**
     **Uva Provincial Council**
     **King's Street, Badulla**
     **Attention: Senior Engineer, Sub Project Coordinating Unit (Uva)**
   - On or before the deadline: **30-06-2023 before 14:00 hours**
   - Bid Package number should be marked on the top left corner of the original and duplicate envelopes.
   - Bids will be opened on **30-06-2023 at 15.00 hrs** in the presence of bidders' representatives who choose to attend it at the above-mentioned address.
9. The Employer will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids, including costs and expenses related to site visits.

**M/s Damayanthi Paranagama,**
**(Chairman, Provincial Procurement Committee)**

**Chief Secretary (Uva Provincial Council)**
**Uva Provincial Council**
**King's Street, Badulla.**

# இலங்கை நெசவுத்தொழில் மற்றும் ஆடைகள் நிறுவனம்

பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் சுதேச ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சு

## நிறுவனத்தின் ஊழியர் குழாமை போக்குவரத்து செய்வதற்காக வேன்கள் மற்றும் மோட்டார் வாகனங்களிற்கான விலைமனுக்கோரல்.

எமது நிறுவனத்தின் பணிக்குழாமினரைப் போக்குவரத்து செய்வதற்காக கீழ்க்காணப்படும் முறையில், இரண்டு வளிச்சீராக்கிகளைக் கொண்டுள்ள வேன்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் கீழ்க்கண்டவாறு தேவைப்படுகின்றன.

i. 10 இருக்கைகளுடன் கூடிய வேன் ஒன்று (தினமொன்றில் அண்ணளவாக 90Km) பொகுணுவிட்டவிலிருந்து ஆரம்பித்து, ஹொரண, பிலியந்தள வீதியூடாக பிலியந்தலைக்கு வருகைதந்து 255 வீதியூடாக வந்து ராவதாவத்தை பாணந்துறை கெசெல்வத்தை ஊடாக காலி வீதி ஊடாக இரத்மலானை விமான நிலைய வீதியிலமைந்துள்ள நிறுவனத்திற்கு வருதல் மற்றும் அதே வீதியில் பணிக்குழாமினரைக் கொண்டு செல்லல்.

ii. 04 இருக்கைகளைக் கொண்ட மோட்டார் வாகனமொன்று (தினமொன்றில் அண்ணளவாக 56KM) பொகுணுவிட்டவில் ஆரம்பித்து ஹொரண பிலியந்தல வீதியில் பிலியந்தல ஊடாக இரத்மலானை விமான நிலைய வீதியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு வருகைதந்து ஆதே வீதியில் பணிக்குழாமினரைக் கொண்டு செல்லல்.

iii. 04 இருக்கைகளுடன் கூடிய மோட்டார் வாகனமொன்று (தினமொன்றில் அண்ணளவாக 25Km) பாணந்துறை கெசெல்வத்தை சந்தியில் ஆரம்பித்து ராவதாவத்தை ஊடாக காலி வீதி ஊடாக இரத்மலானை விமான நிலைய வீதியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு வருகை தருதல் மற்றும் அதே வீதியில் பணிக்குழாமினரைக் கொண்டு செல்லல்.

1. அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார வேலை நாட்களில் மாத்திரம், போக்குவரத்து சேவை தேவைப்படுகின்றது.
2. பணிக்குழாமினரை ஏற்றிக் கொண்டு மு.ப. 8.30 இற்கு நிறுவனத்திற்கு வருகைதருதல் வேண்டுமென்பதுடன், மாலை 4.15 இற்கு நிறுவனத்திலிருந்து அவர்களைக் கொண்டு செல்லல் வேண்டும்.
3. வாகனமானது, சீரான நிலைமையிலிருத்தல் வேண்டுமென்பதுடன், தினமொன்றிற்கு மற்றும் மாதமொன்றிற்கு (20 நாட்கள்) என்ற அடிப்படையில் தனித்தனியாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. பெறுகைக்குழுவினறின் அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் பின்னர், பரிசீலனைக்காக வாகனங்கள் முன்வைக்கப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 2023.06.28 அன்று பி.ப. 2.00 இற்குத் திறக்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை நெசவுத் தொழில் மற்றும் ஆடைகள் நிறுவனம்**
**கந்தவல வத்தை, இல. 02, சேனாதிபதி ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல வீதி,**
**இரத்மலானை**
**தொ.பே. இல. 0112632406**

---

# வாகனங்கள் & இயந்திரங்கள் விலை மனு கோரல்

| Vehicle No | Make/Model | Yard |
|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | |
| WP BGQ-5535 | YAMAHA FZ-S | குருநாகலை |
| WP BIA-9472 | HONDA NAVI | மாதிவெல |
| SP BHN-6204 | TVS NTORQ | மாதிவெல |
| WP BHM-5231 | YAMAHA RAY ZR DISC | மாதிவெல |
| WP BGH-5097 | YAMAHA RAY ZR DRUM | மாதிவெல |
| NP BGM-2633 | BAJAJ PULSAR 200 NS | சாவகச்சேரி |
| NP BHB-1892 | BAJAJ PULSAR 150 DTSI | சாவகச்சேரி |
| NP BHR-9387 | TVS XL SUPER HD | கிளிநொச்சி |
| **முச்சக்கரவண்டிகள்** | | |
| NC AAK-0042 | BAJAJ RE 205 | குருநாகலை |
| NW YG-0228 | BAJAJ RE 205 | குருநாகலை |
| NW QO-2528 | BAJAJ AUTO AR4S | குருநாகலை |
| NW QN-1178 | BAJAJ AUTO AR4S | குருநாகலை |
| WP QV-3204 | BAJAJ 4S | மாதிவெல |
| WP QA-6933 | BAJAJ AUTO RE 2 STROKE | மாதிவெல |
| **இயந்திரம்** | | |
| PRINTING MACHINE | HEIDELBERG MO-S | குருநாகலை |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| தினேஷ் | மாதிவெலி சாலை | 071-0110160 |
| நிபுன ஆகாஷ் | குருநாகலை சாலை | 077-2943514 |
| நிலட்சன் | சாவகச்சேரி சாலை | 077-5968321 |
| ஜனகன் | கிளிநொச்சி சாலை | 076-7625149 |

மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி மற்றும் இயந்திரங்களை 2023 ஜுன் 16, 17, 18, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து 5.00 மணிவரை பார்வையிடலாம்.

2023 ஜுன் 20ம் திகதி மாலை 5.00 மணிக்கு பார்வையிடும் நேரம் முடிவடையும்

2023 ஜுன் 20ம் திகதி வரை மீளப்பெறமுடியாத ரூ. 300 ஐ செலுத்தி டெண்டர் படிவங்களை வாகன சாலை அல்லது கிளையிலிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மாதிவெல சாலை டெண்டர் படிவங்கள் ஏசிய எசெட் தலைமை அலுவலகத்தில் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.
தாமதமாக சமர்பிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC

இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02. தொடர்பு.: 011-7-699000

---

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா) பேராதெனிய

பேராதெனிய பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத்தலைவரினால் பின்வரும் கருமங்கள் மற்றும் சேவைகளிற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

01. வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் (1000 KVA) ATS தொகுதியின் எந்திரவியல் பகுதி (Motorized Unit) யைப் புதுப்பித்தல்
02. கதிரியக்கப் பிரிவின் CT இயந்திரத்திற்காக 30 UPS பெற்றறிகளை வழங்கி நிறுவுதல்
03. கலகா பத்ராவதீ தேசிய பிக்கு பராமரிப்பு நிலையத்திற்கு பச்சை உணவு வகைகளை வழங்கல்

- ❖ இது தொடர்பான பெறுகை முன்னோடிக் கூட்டமானது 2023.06.22 அன்று மு.ப. 10.30 இற்கு பேராதெனிய பொது வைத்திய சாலையின் கலந்துரையாடல் அறையில் நடை பெறும் (மேற்படி இலக்கம் 03 இற்கு இது பொருந்த மாட்டாது)
- ❖ இக் கருமத்திற்கான அனைத்து விபரங்கள் மற்றும் விலைமனுப்படிவங்கள் வைத்திய சாலையின் உத்தியோக இணையத்தளமான www.peradeniyahospital.health.gov.lk மூலம் 2023.06.15 முதல் 2023.07.06 வரை வைத்தியசாலையின் கணக்கிற்குக் கட்டணத்தைச் செலுத்தி தரவிறக்கம் செய்து கொள்ளலாமென்பதுடன் மேலும் 2023.06.15 முதல் வார வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை மற்றும் 2023.07.06 அன்று மு.ப. 10.30 வரை வைத்தியசாலையின் அலுவலகத்திலும் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**

- ❖ விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் மற்றும் நேரம் - 2023.07.06 அன்று மு.ப. 10.30
- ❖ விலைமனுத்திறத்தல் 2023.07.06 அன்று மு.ப. 10.30

**டொக்டர் எச்.எம்.ஏ. திலகரத்ன,**
**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**பொது வைத்தியசாலை (போதனா),**
**பேராதெனிய.**

---

# அரசாங்க அறிவித்தல்

# இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

## பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2023

மேற்படி பரீட்சை **2023 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை** நடைபெறவுள்ளமையை அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவங்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 06.07.2023 ஆகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அரசாங்கப் பாடசாலையொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமே தோற்ற முடியும்.

2024 ஜனவரி 31 ஆம் திகதியன்று 11 வயதுக்குக் குறைந்த 10 அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் உடைய மாணவர்களுக்கு மாத்திரமே உதவிப்பணம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறைமையிலேயே (Online) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள் ஆகியவற்றை **https://onlineexams.gov.lk/eic** ஊடாக பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் அறிவுறுத்தற் பத்திரத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விசாரணை :-**

| | |
|---|---|
| **தொலைபேசி இலக்கம்** | **011-2784208, 011-2784537, 0112786616 011-2786200, 011-2784201, 011-2785202** |
| **நேரடி தொலைபேசி இலக்கம்** | **1911** |
| **தொலைநகல் இலக்கம்** | **011-2784422** |
| **தபால் முகவரி** | **பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல.** |

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**6/5/புலமைப்பரிசில்/2023**
**இலங்கை பரீட்சைகள் திணைக்களம்**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
2023.06.13

---

**எனது இலக்கம் BD/WM/LND/2/5/AQUIS/24**
**பிரதேச செயலகம் காரியாலயம்**
**வெலிமடை**
**2023.06.05**

# காணி எடுத்தற் சட்டம் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கீழ்காணும் காணிக்காக அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரித்து மற்றும் நட்டஈட்டு விசாரணைகள் 2023.06.28ஆம் திகதி வெலிமடை பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படுமென பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுடன் தொடர்புடையவர்கள் இவ் விசாரணைக்காக சமூகம் தர வேண்டும். மேலதிக தகவல்களுக்காக இல. 2331/54 மற்றும் 2023.05.12ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**உப பட்டியல்**

| | |
|---|---|
| பிதேச செயலாளர் பிரிவு | வெலிமடை |
| ஆரம்ப வரைபட இலக்கம் | கடத்திரள் இலக்கம் 710510, தொகுதி இலக்கம் 01, பத்திர இலக்கம் 01 |
| காணி துண்டுகளின் எண்ணிக்கை | 01 |
| காணியின் மொத்த விஸ்தீரணம் | 0.8094 ஹெக்டேயர் |
| அமைவிட கிராமம் | தம்பவிண்ண |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | 59ஏ தம்பவிண்ண |

**டப்.எம்.சீ. வீரசிங்க**
**பிரதேச செயலாளர்,**
**வெலிமடை.**

---

# நீர்கொழும்பு மாநகர சபை

## கேள்வி கோரல் அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களை பூர்த்தி செய்வதற்காக பொறியிடப்பட்ட நகல் பிரதியுடனான கேள்வி விண்ணப்பங்கள் 2023.07.07 பி.ப.2.00 வரை ஏற்கப்படும்.

**01. கேள்வி விபரம்**
**கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல்**
- 2023.06.15 முதல் 2023.07.06 பி.ப.2.00 வரை
**கேள்வி விண்ணணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல்**
- 2023.07.07 பி.ப.2.00 வரை
**கேள்வி விண்ணப்பங்கள் திறத்தல்**
- 2023.07.07 பி.ப.2.00 இற்கு

**02. தகைமைகள்**

01. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரரால் மேற்கொள்ளப்படும் சமமான நிலையிலான வேலைகள் பற்றிய விபரம் மற்றும் நிறுவனத்தின் மற்றும் ஊழியர் குழாமின் விபரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விண்ண்பங்கள் 2023.06.15 முதல் 2023.07.06ம் திகதிவரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான கால எல்லைக்குள் மீளளிக்கப்படாத ரூ.3500.00 தொகையை செலுத்திய பின்னர் நீர்கொழும்பு, தெல்வத்த சந்தி, நீர்கொழும்பு மாநகர சபையின் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்லாம்.
03. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நகல்பிரதியுடன் 2023.07.07 பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன் மாநகர ஆணையாளர், மாநகரசபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
04. கேள்விகள் திறத்தல் கேள்விகள் ஒப்படைத்தல் முடிவடைந்தவுடன் இடம்பெறுவதுடன் நேரம் தாமதித்து கிடைக்கும் மற்றும் தாமதமாக ஒப்படைக்கப்படும் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ராஜபக்ஷ பூங்காவின் நடைபயிலும் பாதையை புதுப்பித்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
05. எந்த கேள்வி ஆவணத்தையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை நீர்கொழும்பு மாநகர சபைக்கு உரியது.
06. கேள்விகள் திறக்கப்படும் வேளையில், கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை மாநகர பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொ. பே.இலக்கத்தை அழைத்து அறிந்து கொள்ளலாம்.

| தொடர் இலக்கம் | செயற்றிட்டம் | CIDA பதிவு எல்லை | கேள்விப் படிவக் கட்டணம் ரூ | கேள்வி வைப்பு மீளளிக்கப் படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | ராஜபக்ஷ பூங்காவின் நடைபயிலும் பாதையைப் புதுப்பித்தல் | C-7 | ரூ.3,500.00 | ரூ.76,000.00 |

மாநகர பொறியியலாளர் - 031-2233190, 031-2220053
மின்னஞ்சல் : nmcengineer@gmail.com

நீர்கொழும்பு மாநகர அலுவலகத்தில்
2023.06.13

டபிள்யூ.ஏ.டி.பிரபாத் லக்ஷ்மன்
மாநகர ஆணையாளர்
மாநகர சபை
நீர்கொழும்பு

---




Looking for Your Life Partner..,
Wherever you are... Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Make your payment through online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343


---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்

## தேசிய போட்டி விலைமனுக்கோரல்

கீழ்க்காணும் வேலைகளுக்காக இரத்தினபுரி கெடன்கமவில் வசிக்கும் மாகாண கல்விப் பணிமனையின் மாகாண கல்விப் பணிப்பாளரால் 2023.06.15ம் திகதி முதல் 2023.07.06 மு.ப. 10.00 வரை இவ் வேலை சார்பாக தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து வேறுவேறாக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிமனை | விபரம் | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூ. | ஒப்பற்த பதிவுப் பெறுமதி | மதிப்பிடப் பட்ட வேலை பெறுமதி ரூ. மி. |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | TEDP/SGP/1SMV/2020 | தெஹிஓவிட்ட | கே/தெஹி/ இம்புலான ஸ்ரீ சேன கல்லூரியின் மூன்று மாடி தொழில் நுட்ப பீட கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலை) | 5000.00 | 800,000.00 | C4 மற்றும் C3 | 77.9 |
| 02 | TEDP/SGP/SAC/2021 (R-1) | இரத்தினபுரி | ர/சென் அலோசியஸ் கல்லூரியில் தற்போதுள்ள வகுப்பு அறைக் கட்டிடம் பொறியியல் தொழில் நுட்பம், உயிரியல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவாக மாற்றுதல் | 2000.00 | 480,000.00 | C7, C6 மற்றும் C5 | 15.6 |

**அட்டவணை 01**

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு எமது இணையதளத்திற்கு பிரவேசியுங்கள் edudept.sg.gov.lk

**தலைவர்/செயலாளர்,**
**மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**கெடன்கம, இரத்தினபுரி.**
**தொ.பே./பெக்ஸ். 045-2230037**
2023.06.14

---

# சிறு விளம்பரம்

## வேலைவாய்ப்பு

322



**வெற்றிடங்கள்**
**மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

மேசன், பொட்டி பெயின்ட் ஆகிய வற்றிற்கானவர்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை. ஓவர் டைம் வழங்கப்படும். 0755045022/ 0761561827. 035997

---


**Repeat Your Ad For Better Offers**


---

# விலைமனு அழைத்தல்

## கண்டி மாநகர சபை

### கண்டி மாநகர சபையின், மாநகர வாகனத்தரிப்பிட வளாகத்தில் அறிவித்தல்களை இரண்டு ஆண்டுகளிற்கு விளம்பரப்படுத்துவதற்காக தற்காலிகமாகக் குத்தகைக்கு வழங்கல்

1. கண்டி மாநகர சபையின் மாநகர வாகனத் தரிப்பிட வளாகத்தில், அறிவித்தல்களை விளம்பரப்படுத்துவதற்காக இரண்டு ஆண்டுகளிற்ககுக் குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுதாரர்களிற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.
2. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ரூபா 3,480.00 இற்கான (அனைத்து வரிகளும் உள்ளடங்களாக) மீளளிக்கப்படாத கட்டணமொன்றை கண்டி மாநகர சபையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | விபரம் | |
|---|---|---|
| 1 | விலைமனுப்படிவக் கட்டணம் | ரூபா 3,480.00/ அனைத்து வரிகளும் உட்பட |
| 2 | விலைமனுப்படிவங்களை வழங்கல் ஆரம்பிக்கப்படும் தினம் | 2023.06.09 அன்று மு.ப. 9.00 முதல் |
| 3 | விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித் தினம் | 2023.06.30 அன்று பி.ப. 2.45 வரை |
| 4 | விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் நேரம் | 2023.07.04 அன்று மு.ப. 10.00 வரை |
| 5 | மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை (காசாக வைப்புச் செய்யப்படல் வேண்டும்) | ரூபா 50,000.00 |
| 6 | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | ரூபா 3,600,000.00 (வரிகளின்றி) |
| 7 | வழங்கப்படும் கால எல்லை | இரண்டு (02) ஆண்டுகளிற்காக |
| 8 | விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும் முகவரி | கண்டி மாநகர சபையின் கலப்பு வருமானப் பிரிவில். |
| 9 | விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முகவரி | பிரதான மாநகர கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியில் 2023.07.04 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் சேர்த்தல் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் முடியும். தாமதமாகக்கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். |

3. இதற்காக ஆர்வங்காட்டும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் 2023.06.09 முதல் கண்டி மாநகர சபையில் வார வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப. 2.45 வரை கணக்காளர் (வருமானம்) இடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. கண்டி மாநகர சபையுடன் சட்டபூர்வ நடவடிக்கை முறைகளில் ஈடுபட்டுள்ள தனி நபர்கள்/ நிறுவனங்கள் மற்றும்/ அல்லது கண்டி மாநகர சபையில் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்கள்/ நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது.
5. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் நபர்/ நிறுவனமானது தாமே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் தொடர்பான இறுததித்தீர்மானமானது. மாநகர ஆணையாளருக்கு உரித்தாகும்.

**கே.கே.ஜீ.ஐ.டீ.பி. விஜேதிலக,**
**மாநகர ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை, தொலைபேசி இல. :- 081-2227395**

## லங்கா பிரீமியர் லீக் வீரர்கள் ஏலம்:

# அதிக தொகைக்கு ஏலம் போனார் சரித்: தனஞ்சயவுக்கும் அதிக விலை

லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) ஏலத்தில் தனஞ்சய டி சில்வா முதல் வீரராக 76,000 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போனதோடு ஆரம்பக்கட்ட ஏலத்தில் சரித் அசலங்க அதிகட்சமாக 80,000 டொலர்களுக்கு விலைபோனார்.



நான்காவது லங்கா பிரீமியர் லீக் தொடரில் முதல் முறையாக இடம்பெற்ற வீரர்கள் ஏலம் நேற்று (14) கொழும்பு, சங்ரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இம்முறை தொடரில் பங்கேற்கும் ஐந்து அணிகளும் இந்த வீரர்கள் ஏலத்தில் பங்கேற்றன.

வீரர்களை வாங்க ஒவ்வொரு அணிக்கும் தலா 500,000 டொலர்களை செலவிட அனுமதிக்கப்பட்டதோடு அதில் ஒவ்வொரு அணியும் தமது குழாத்தை அமைப்பதற்கு 86 வீத தொகை செலவிடுவது அவசியமாக இருந்தது.

நேற்றைய எல்.பி.எல் ஏலத்தில் 156 வெளிநாட்டு வீரர்கள் உட்பட மொத்தம் 360 வீரர்கள் இடம்பெற்றிருந்தனர். இதில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லைன் மற்றும் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் தமீம் இக்பால் ஆரம்பத்தில் 50 ஆயிரம் டொலர் அடிப்படை விலைக்கு ஏலம் விடப்பட்டபோதும் எந்த அணியும் அவர்களை வாங்க முன்வரவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கையின் முதல் வீரராக தனஞ்சய டி சில்வாவின் பெயர் அறிவிக்கப்பட்டபோது அவரை வாங்க கடும் போட்டி நிலவியது. இலங்கை அணியின் சகலதுறை வீரராக செயற்படும் தனஞ்சய டி சில்வாவின் பெயர் 40,000 டொலர் அடிப்படை விலைக்கு அறிவிக்கப்பட்டவுடன் அந்த விலை உடன் 50,000 டொலர்களாக உயர்ந்தது.



அவரை வாங்க பிலவ் கண்டி மற்றும் கொலம்போ கிங்ஸ் அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. தொடர்ந்து தம்புள்ள அவுரா அணி அவரை 72,000 டொலர்களுக்கு கேட்ட நிலையில் கண்டி 74,000 டொலராக விலையை உயர்த்திய போதும் தம்புள்ள அவுரா கேட்ட 76,000 டொலர்கள் இறுதியானது.

இந்நிலையில் இலங்கை அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான சரித் அசலங்கவை வாங்கவும் அணிகளிடையே போட்டி நிலவியது. 40,000 டொலர்கள் அடிப்படை விலையுடன் அசலங்கவின் பெயர் அறிவிக்கப்பட்ட நிலையில் கொலம்போ மற்றும் ஜப்னா அணிகளிடையே போட்டி நிலவியது. கடைசியில் 80000 டொலர்களுக்கு நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அவரை வாங்கியது.

இவர்களைத் தொடர்ந்து இலங்கையின் அனுபவ துடுப்பாட்ட வீரரான தினேஷ் சந்திமாலை பிலவ் கண்டி 72,000 டொலர்களுக்கு வாங்கியதோடு இலங்கையின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர 70,000 டொலர்களுக்கு பிலவ் கண்டி அணிக்கு விலைபோனார்.

வெளிநாட்டு வீரர்களில் பாகிஸ்தானின் சொஹைப் மலிக்கை ஜப்னா கிங்ஸ் 50,000 டொலர்களுக்கும் வஹாப் ரியாஸை கொலம்போ ஸ்ட்ரைக்கர்ஸ் 40,000 டொலர்களுக்கும் வாங்கியது. இதில் பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் விலைபோகாததோடு அகில தனஞ்சய மற்றும் இலங்கையில் இளம் வீரர்கள் சிலரும் விலைபோகத் தவறினர். இளம் வீரர் துனித் வெள்ளாலகேவை ஜப்னா கிங்ஸ் 56,000 டொலருக்கு வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை லங்கா பிரீமியர் லீக் தொடர் ஜூலை 31 தொடக்கம் ஒகஸ்ட் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஏற்கனவே இந்த தொடருக்காக டேவிட் மில்லர், பாபர் அஸாம், ஷகீப் அல் ஹசம் போன்ற முன்னணி சர்வதேச வீரர்களை அணிகள் ஒப்பந்தம் செய்திருப்பதோடு, இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க உட்பட இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் பலரும் அணிகளுடன் ஒப்பந்தமாகியுள்ளனர்.

# முதல் பயிற்சி போட்டியில் இலங்கை போராடி வெற்றி



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு சிம்பாப்வே சென்றிருக்கும் இலங்கை அணி தனது முதலாவது பயிற்சி ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை 3 விக்கெட்டுகளால் போராடி தோற்கடித்தது.

புலவாயோவில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்ற இந்த பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நெதர்லாந்து அணியை 45.3 ஓவர்களில் 214 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த இலங்கை அணியால் முடிந்தது.

பயிற்சிக்காக எட்டு பந்துவிச்சாளர்கள் பயன்படுத்தப்பட்ட நிலையில் கசுன் ராஜித்த மூன்று விக்கெட்டுகளையும் மஹீஷ் தீக்ஷன மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. எனினும் ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்ன 55 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 47 ஓட்டங்களை பெற்றதோடு மத்திய பின் வரிசையில் வந்த அணித் தலைவர் தசுன் ஷானக்க 52 பந்துகளில் 8 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இலங்கை அணி 37.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 215 ஓட்டங்களை பெற்றது. எனினும் இலங்கை அணி 77 பந்துகளை மிச்சம் வைத்தே இந்த ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணி தனது இரண்டாவது பயிற்சிப் போட்டியில் இன்று (15) அமெரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

# லீக்குகளை கட்டுப்படுத்த ஐ.சி.சி புதிய நடவடிக்கை

அதிகரித்து வரும் டி20 கிரிக்கெட் லீக்குகளின் செல்வாக்கை குறைக்கும் வகையில் கிரிக்கெட் லீக் அணிகளால் ஒப்பந்தம் செய்ய முடியுமான வெளிநாட்டு வீரர்களை கட்டுப்படுத்துவது உட்பட சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் (ஐ.சி.சி) இரு மாற்றங்களை அறிமுகம் செய்யவுள்ளது.




இதில் வெளிநாட்டு வீரர்களை கட்டுப்படுத்துவது தவிர, தாம் ஒப்பந்தம் செய்யும் ஒவ்வொரு வீரருக்கும் லீக்குகள் தேசிய கிரிக்கெட் சபைகளுக்கு கட்டணம் செலுத்தவும் ஐ.சி.சி கட்டுப்பாடு கொண்டுவரவிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதில் லீக் அணிகளினது ஆடும் பதினொருவர் அணியில் நான்கு வெளிநாட்டு வீரர்களுக்கே அனுமதி அளிக்க ஐ.சி.சி தீர்மானித்துள்ளது. எனினும் இந்திய பிரீமியர் லீக், லங்கா பிரீமியர் லீக் போன்ற லீக்குகளில் ஏற்கனவே இந்த கட்டுப்பாடு இருப்பதால் இதனால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது.

என்றாலும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப்படும் சர்வதேச லீக் டி20 தொடரில் அணி ஒன்றுக்கு ஒன்பது வெளிநாட்டு வீரர்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதோடு அமெரிக்காவில் விரைவில் ஆரம்பமாகவுள்ள மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் பதினொருவர் அணியில் ஆறு வெளிநாட்டு வீரர்களுக்கு அனுமதி அளிக்கப்படவுள்ளது.

ஐ.சி.சி மேற்கொள்ளவிருக்கும் மற்றைய மாற்றம் காரணமாக ஒவ்வொரு வீரருக்காகவும் செலுத்தப்படும் கட்டணத்தில் 10 வீதம் தேசிய கிரிக்கெட் சபைக்கு செலுத்த வேண்டும். இந்த ஏற்பாடு ஏற்கனவே இந்திய பிரீமியர் லீக்கில் உள்ளது.

லீக் கிரிக்கெட்டில் ஆடுவதற்கான வாய்ப்புகளை கட்டுப்படுத்துவது, வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று லீக் கிரிக்கெட்டில் ஆடுவதை தடுப்பதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இங்கிலாந்து வீரர் ஜேசன் ரோய் கடந்த மாதம் இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

முன்மொழியப்பட்டிருக்கும் இந்த வெளிநாட்டு வீரர்களுக்கான கட்டுப்பாடு ஐ.சி.சியின் 12 முழு அங்கத்துவ நாடுகளுக்கே பொருந்துவதாக உள்ளது. இதன்மூலம் லீக் கிரிக்கெட்டில் இணை அங்கத்துவ நாடுகளின் வீரர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்குவதாக அமையும்.

# இலங்கை ஏ இலகு வெற்றி

தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி 160 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.



பல்லேகலவில் நடைபெற்ற இந்தப் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று தென்னாபிரிக்க ஏ அணிக்கு 346 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது தென்னாபிரிக்க ஏ அணி சார்பில் எந்த வீரரும் 30 ஓட்டங்களைக் கூட எட்டாத நிலையில் ட்ரிஸ்டான் ஸ்டப் காயம் காரணமாக துடுப்பெடுத்தாட வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை சார்பில் லக்ஷித மானசிங்க, லசித் எம்புல்தெனிய மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

நான்கு நாட்கள் கொண்ட இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்களை பெற்றநிலையில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 131 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இந்நிலையில் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை ஏ அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுக்க 151 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

ரமேஷ் மெண்டிஸ் அதிகபட்சமாக 46 ஓட்டங்களை பெற்றதோடு கமிந்து மெண்டிஸ் 35 ஓட்டங்களை குவித்தார். தென்னாபிரிக்க அணி சார்பில் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளை வீழ்த்திய சனுரான் முத்துசாமி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்து இந்த உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் மொத்தம் 12 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலங்கை ஏ அணி இரண்டாவது இன்னிங்ஸில் சொற்ப ஓட்டங்களுக்கு சுருண்டபோதும் அந்த அணி முதல் இன்னிங்ஸில் 194 ஓட்ட முன்னணியை பெற்றதால் தென்னாபிரிக்க ஏ அணிக்கு சவாலான வெற்றி இலக்கை நிர்ணயிக்க முடிந்தது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்டில் இலங்கை ஏ 1–0 என முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி தம்புள்ளையில் வரும் ஜூன் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# மகனை நாய் கூண்டில் பூட்டி கொல்ல முயன்ற தாய் கைது

ஆஸ்திரியாவில் தனது 12 வயது மகனை சிறிய நாய்க் கூட்டுக்குள் அடைத்து சித்திரவதை மற்றும் கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தாய் ஒருவர் விசாரணைக்கு முகம்கொடுத்துள்ளார்.




32 வயதான அந்தப் பெண் தனது மகனை பூஜ்யத்திற்கு குறைவான வெப்பநிலையில் பட்டினியில் வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த சம்பவம் ஆஸ்திரியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பெண் வியன்னாவின் வடமேற்கே உள்ள கிரெம்ஸ் நகரில் கடந்த நவம்பர் தொடக்கம் விசாரணைக்கு முன்னதரான தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். சமூகப் பணியாளர் ஒருவர் இந்த சம்பவம் குறித்து அவதானத்தை ஏற்படுத்தியதை அடுத்தே அந்தத் தாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பிரிந்து வாழும் சிறுவனின் தந்தை பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து கடந்த நவம்பர் 22ஆம் திகதி தாழ் வெப்பநிலையில் மயக்கத்துடன் இருந்த சிறுவன் மீட்கப்பட்டுள்ளான்.

அப்போது அந்த சிறுவன் பல மாதங்கள் சித்திரவதைக்கு முகம்கொடுத்து மரணத்தை நெருங்கிய நிலையில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதோடு அவனது தாய் அடுத்த நாள் கைது செய்யப்பட்டார்.

# 4 நாட்கள் இடைவிடாது சமைத்து உலக சாதனை



நைஜீரியாவைச் சேர்ந்த சமையல்காரர் ஒருவர், மிக நீண்ட நேரம் தனியாக ஓய்வின்றி சமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

26 வயது ஹில்டா பாச்சி, 93 மணி நேரம், 11 நிமிடங்களுக்கு நின்றபடியே சமைத்தார். 4 நாட்கள் சளைக்காமல் அந்த முயற்சியில் ஈடுபட உடற்பயிற்சிக் கூடத்தில் பயிற்சி செய்ததாகப் பாச்சி கூறினார்.

நைஜீரிய உணவை உலகெங்கும் மக்கள் உண்டு மகிழ வேண்டும் என்பதற்காகச் சாதனை முயற்சியில் இறங்கியதாக அவர் கூறினார்.

இதற்குமுன் இந்தியாவைச் சேர்ந்த சமையல்காரர் ஒருவர் 87 மணிநேரம், 45 நிமிடங்களுக்குத் தனியாகச் சமைத்து கின்னஸ் சாதனையைப் புரிந்திருந்தார்.

## சர்வதேச செய்திகள்

# நீதிமன்றில் குற்றச்சாட்டை மறுத்தார் டொனால்ட் டிரம்ப்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது சுமத்தப்பட்ட குற்றவியல் குற்றச்சாட்டைத் தொடர்ந்து தாம் குற்றமற்றவர் என்று அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த டொனால்ட் டிரம்ப் தேர்தல் தோல்வியின் பின்னர், அமெரிக்காவின் அணுவாயுதங்கள் குறித்த இரகசிய ஆவணங்கள் உட்பட சுமார் 300 இரகசிய ஆவணங்களை புளோரிடா மாநிலத்திலுள்ள டிரம்ப்புக்குச் சொந்தமான மார் ஏ லாகோ இல்லத்துக்கு அவர் எடுத்துச் சென்றார் என கடந்த வாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளும் நிகழ்வுகள் நடத்தப்படும் மார் ஏ லாகோ இல்லத்தில் நடன அறை, படுக்கையறை, குளியலறைகளிலும் இந்த இரகசிய ஆவணங்கள் காணப்பட்டதாக, 49 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவரை டிரம்ப் எதிர்நோக்கும் மிக சவால்மிக்க வழக்காக இது கருதப்படுகிறது. அதனால் அவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு பாதிக்கப்படலாம்.

இந்த வழக்கில் மியாமியிலுள்ள நீதிமன்றத்தின் முன் தோன்றிய டிரம்ப் தான் தவறு செய்யவில்லை என்றும், வழக்கை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து விடுவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) நீதிமன்றத்திற்குச் சென்ற பின் டிரம்ப் உணவகம் ஒன்றில் காணப்பட்டார். நீதிமன்ற வழக்கு சிறப்பாகப் போய்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று தனது 77ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய டிரம்புக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படாத நிலையில் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வரலாற்றில், பதவியிலுள்ள அல்லது முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக மத்திய அரசின் குற்றவியல் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிக்ஸில் இணைய பாகிஸ்தான் விருப்பம்




பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பில் சேர்வதற்கு பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

இது பற்றி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் ஆராயப்பட உள்ளது. பாகிஸ்தான் உட்பட 19 நாடுகள் இவ்வமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. பிரிக்ஸ் அமைப்பின் தற்போதைய உறுப்பு நாடுகளும் அங்கத்துவத்தை விரிவுபடுத்த விருப்பம் கொண்டுள்ளன.

பிரிக்ஸ் அமைப்பானது பொருளாதார மற்றும் வர்த்தக ரீதியில் ஜி7 அமைப்புக்கு நேரடிச் சவாலாக உள்ளது.

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.5 வீதத்தை பிரிக்ஸ் அமைப்பு நாடுகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேநேரம் ஜி7 நாடுகளின் பங்கு 30 வீதத்திற்கு குறைவடைந்துள்ளது. பிரிக்ஸ் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து நாடுகளும் ஜி20 நாடுகள் அமைப்பிலும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 15ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.